
APPOLO STUDY CENTRE

# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி 01-28, 2025



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 9 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 13 |
| 4 | திட்டங்கள் | 18 |
| 5 | சர்வதேச நிகழ்வுகள் | 20 |
| 6 | இந்தியாவும் இதர நாடுகளும் | 23 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 24 |
| 8 | பாதுகாப்பு | 30 |
| 9 | பொருளாதாரம் | 34 |
| 10 | நியமனங்கள் | 38 |
| 11 | விருதுகள் | 39 |
| 12 | புகழ்பெற்ற ஆளுமைகள் | 40 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 42 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் | 43 |
| 16 | விளையாட்டுகள் | 51 |
| 17 | அறிக்கைகள் | 53 |
| 18 | தரவரிசைப்பட்டியல் | 55 |
| 19 | முக்கிய தினங்கள் | 57 |
| 20 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - முந்தைய தேர்வு வினாக்கள் | 60 |


APOLLO STUDY CENTRE

# TAMIL NADU

➢ **தமிழ்நாட்டில் புதிய சதுப்பு நிலங்கள் 2025**

- ✓ தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தல் உள்ள இரண்டு பறவைகள் சரணாலயங்கள் - சக்கரக்கோட்டை மற்றும் தேர்த்தாங்கல் - ராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.




- ✓ இதன்மூலம், தமிழ்நாட்டில் இராம்சார் தளங்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான ராம்சார் தளங்கள் தமிழ்நாட்டிலேயே உள்ளன.
- ✓ உத்தரப் பிரதேசம் 10 தளங்களைக் கொண்டுள்ளது.
- ✓ இராமநாதபுரத்தில் சித்திரங்குடி மற்றும் காஞ்சிரங்குளம் ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கனவே இரண்டு ராம்சார் தளங்கள் உள்ளன.
- ✓ மற்ற 2 புதிய தளங்கள் கெக்சியோபால்ரி சதுப்பு நிலம் (சிக்கிம்) மற்றும் உத்வா ஏரி (ஜார்க்காண்ட்) ஆகும்.
- ✓ இப்போது இந்தியாவில் மொத்தம் 89 ராம்சர் தளங்கள் உள்ளன.

➢ **காலணி உற்பத்தியை ஊக்குவிக்கவும், மாணவர்களுக்கு வீட்டு வாசலிலேயே கல்வியை வழங்கவும் மாநிலத்தின் முயற்சிகளை பொருளாதார ஆய்வு எடுத்துக் காட்டுகிறது**



- ✓ ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பொருளாதார ஆய்வறிக்கை 2024-25, காலணி உற்பத்தி மற்றும் இல்லம் தேடி கல்வி ஆகியவற்றை வளர்ப்பதற்கான தமிழக அரசின் மூலோபாய முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.
- ✓ "தமிழ்நாடு, பாரம்பரிய தோல் துறையில் முன்னணியில் உள்ளது, இப்போது தோல் அல்லாத காலணிகளின் வளர்ச்சியில் முன்னணியில் உள்ளது.

- ✓ இந்தியாவின் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் 38 விழுக்காடு பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகிறது. மேலும், இந்தியாவின் மொத்த தோல் ஏற்றுமதியில் 47 விழுக்காடு பங்களிக்கிறது.
- ✓ "இந்தத் துறை 2 இலட்சத்துக்கும் அதிகமான வேலைகளை உருவாக்குகிறது" என்று சர்வே கூறுகிறது.

## ➢ இந்தியாவின் முதல் வெள்ளைப் புலி இனவிருத்தி மையம்

- ✓ மத்தியப் பிரதேசத்தின் ரேவா மாவட்டத்தில் இந்தியாவின் முதல் வெள்ளைப் புலி இனவிருத்தி மையத்திற்கு ஒன்றிய உயிரியல் பூங்கா ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.




- ✓ இந்த முயற்சியானது, வரலாற்று ரீதியாக கடைசியாக அறியப்பட்ட காட்டு வெள்ளைப் புலியுடன் ரேவா இணைக்கப்பட்டுள்ள இந்த நிலையில், வனவிலங்கு பாதுகாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது.
- ✓ 2011இல் கொள்கை அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் திட்டம், முகுந்த்பூரில் உள்ள மாநிலத்தின் ஒரே வெள்ளைப் புலி ச∴பாரிக்கு அருகில் உள்ள கோவிந்த்கரில் நிறுவப்படும்.
- ✓ இந்த இனப்பெருக்க மையம் பல்லுயிர் பாதுகாப்பை மேம்படுத்தும், வனவிலங்கு சுற்றுலாவை மேம்படுத்தும், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ➢ தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0

- ✓ காலநிலை கல்வியறிவுக்கான கொள்கையை தமிழக அரசு விரைவில் உருவாக்கி அறிவிக்கும்.



- ✓ "சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0ல் தொடக்க உரையாற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், "மாணவர்கள்மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும் காலநிலை விழிப்புணர்வைப் பரப்பப் போகிறோம்" என்று தெரிவித்தார்.
- ✓ "தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் சுற்றுச் சூழல் கிளப்களை அமைப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.
- ✓ காலநிலை மாற்றம் குறித்து கல்வி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ தமிழ்நாடு அரசு வெப்பச்சலனத்தை மாநில பேரிடராக அறிவித்து அரசிதழில் வெளியிட்டுள்ளது.
- ✓ இன்று உலகமும் மனித சமுதாயமும் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக காலநிலை மாற்றம் உள்ளது.

## ➢ திருச்சிராப்பள்ளியில் பறவைகள் பூங்காவை உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்


- ✓ கம்பரசம்பேட்டையில், நமக்கு நாமே திட்டத்தில் ரூ.18.63 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பறவைகள் பூங்காவை தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.




- ✓ 4.02 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்தப் பூங்காவில், தமிழ்ச் சங்கத்தின் இயற்கைக் காட்சிகள், ஏழு பரிமான தியேட்டர் மற்றும் கோய் மீன்குளம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள அம்சங்கள் உள்ளன.
- ✓ இந்தத் திட்டம் சமூக உள்கட்டமைப்பில் பொதுமக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கிறது. இதற்கான பணிகள் நவம்பர் 2023இல் தொடங்கின.

## ➢ காசி தமிழ் சங்கமம் 3.0

- ✓ காசி தமிழ் சங்கமம் 3.0, 2025 பிப்ரவரி 15 முதல் 24 வரை திட்டமிடப்பட்டுள்ளது.



- ✓ இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட தமிழ்நாட்டிலிருந்து சுமார் 1080 பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.
- ✓ இந்த நிகழ்வு கல்வி அமைச்சகத்தினால் ஏனைய அமைச்சகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு பிராந்தியங்களுக்கு இடையே கலாச்சார மற்றும் வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டாடும் நோக்கத்திலும் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது.
- ✓ இந்தப் பதிப்பின் கருப்பொருள், தமிழ் கலாச்சாரத்தில் மதிக்கப்படும் மகிரிஷி அகஸ்தியர் என்பதாகும்.

## ➢ மாநிலத்தில் உள்ள ஐந்து பெரிய அணைகள் விரைவில் புனரமைக்கப்படும்


- ✓ ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக பழமையாக உள்ள மாநிலத்தின் ஐந்து பெரிய அணைகள், உலக வங்கி உதவியுடன் அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (Dam Rehabilitation and Improvement Project)-2இன்கீழ் விரைவில் புனரமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன.



- ✓ அணையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கட்டமைப்புகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கும் உரிய திட்டங்கள், பல்வேறு நிலைகளில் உள்ளன.
- ✓ வைகை அணையை புனரமைக்கவும், நீர்பிடிப்பு பகுதியில் சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் நீர்வளத்துறை, ரூ.20 கோடி செலவில் பணிகளை விரைவில் தொடங்க உள்ளது.

## ➢ காலநிலை கல்வியை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பள்ளிகளிலும் சுற்றுச் சூழல் கிளப்களை அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது

- ✓ காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கம் குறித்து சிறு வயதிலிருந்தே மாணவர்களுக்குக் கற்பிக்கும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் சுற்றுச் சூழல் கிளப் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அன்று அறிவித்தார்.



- ✓ தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.0இன் தொடக்க விழாவில் பங்கேற்ற அவர், மாணவர்கள் மூலம் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையேயும் காலநிலை விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், காலநிலை கல்வி குறித்த கொள்கையை அரசு விரைவில் அறிமுகப்படுத்தும் என்றார்.

## ➢ இப்போது, 108 ஆம்புலன்ஸ்களை மொபைல் போன்கள்மூலம் கண்காணிக்க முடியும்




- ✓ சோதனை ஓட்டத்திற்குப் பிறகு, 108 ஆம்புலன்ஸ் நெட்வொர்க் அதன் செயலியை வெளியிட்டது – 'அவசரம் 108 தமிழ்நாடு' - இது இப்போது மருத்துவ அவசரத்திற்காக ஆம்புலன்ஸ்களை நாடுபவர்கள் தங்கள் மொபைல் போனில் வாகனங்களின் வருகையைக் கண்காணிக்க உதவும். அதைச் செயலி மூலமாக மட்டுமல்லாது குறுஞ்செய்தி மூலமாகவும் செய்ய முடியும்.
- ✓ 108 அவசரகாலப் பதிலளிப்பு மையத்தைத் தங்கள் மொபைல் போன்களில் அழைப்பவர்கள், ஆம்புலன்ஸ்களை நிகழ்நேரமாகக் கண்காணிப்பதற்காக இணைப்புடன் கூடிய குறுஞ்செய்தி ஒன்றைப் பெறுவார்கள்.

## ➢ பட்டியலின மற்றும் பழங்குடியின ஆணையத்திற்கு புதிய உறுப்பினர்கள் 2025

- ✓ பிரபல எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான வி. அண்ணாமலை என்ற இமயம், தமிழ்நாடு மாநில பட்டியலின மற்றும் பழங்குடியின ஆணையத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ எஸ். செல்வகுமார் (கோவை மாவட்டம்), எஸ். ஆனந்த ராஜா (தஞ்சாவூர் மாவட்டம்), எம். பொன் தவுஸ் (நீலகிரி) மற்றும் பி. இளஞ்செழியன் (திருநெல்வேலி) ஆகியோர் இந்த ஆணையத்தின் மற்ற உறுப்பினர்களாக உள்ளனர்.
- ✓ இந்த ஆணைய உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.
- ✓ ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். தமிழ்வாணன், இந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## ➢ முதலமைச்சரின் மருந்தகங்கள்

- ✓ தமிழ்நாடு அரசு இம்மாத இறுதிக்குள் மாநிலம் முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது.




- கூட்டுறவு மருந்தகங்கள், அம்மா மருந்தகங்கள் மற்றும் பிரதமரின் மலிவுவிலை மருந்தகங்களைவிட குறைவான விலையில் மருந்துகளை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.
- இந்த மருந்தகங்கள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இம்காம்ப்ஸ், டாம்கால், அறுவை சிகிச்சை மற்றும் ஊட்டச்சத்து மருந்துகளுடன் 186 வகையான ஜெனரிக் மருந்துகளை வழங்கும்.
- தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம், தரமான மருந்துகளை கொள்முதல் செய்து மற்ற அரசு மருந்தகங்களைவிட 10 விழுக்காடு தள்ளுபடி விலையில் விற்பனை செய்யும்.

# மாநிலங்கள்

➢ **இமாச்சலப் பிரதேசம் கஞ்சா விவசாய முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது**




✓ கஞ்சா சாகுபடிக்கான அதிகரித்துவரும் தேவை மற்றும் அதன் மருத்துவ, விவசாயம் மற்றும் தொழில்துறை மதிப்பின் உலகளாவிய அங்கீகாரத்திற்கு பதலளிக்கும் வகையில், முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு தலைமையிலான இமாச்சலப் பிரதேச அரசு, கஞ்சா (சணல்) விவசாயத்திற்கான முன்னோடி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

✓ இந்தத் திட்டம், இப்பகுதியில் கஞ்சா சாகுபடியின் சாத்தியமான நன்மைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. அதன் மருத்துவ மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்கு முக்கியத்துவம்அளிக்கிறது.

➢ **வட இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் வசதிக்கு இமாச்சலப் பிரதேச அரசு களம் அமைக்கிறது**

✓ பசுமை ஆற்றல் மாற்றத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியாக, இமாச்சலப் பிரதேச அரசு, வட இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையை நளகரில் உள்ள தபோட்டாவில் தொடங்கியுள்ளது. இது மாநிலத்தின் தொழில்துறை பகுதியான பாடி-ப்ரோட்டிவாலா மற்றும் சண்டிகருக்கு அருகிலுள்ள நலகார்க் பகுதியில் அமைந்துள்ளது.



✓ 1 மெகாவாட் திறன் கொண்ட இந்த ஆலைக்கு முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு அடிக்கல் நாட்டினார். இது மார்ச் 31, 2026க்குள் இந்தியாவின் முதல் பசுமையான மாநிலமாக மாறும் மாநிலத்தின் குறிக்கோளுடன் இணைகிறது.

✓ இந்த ஆலை ஒரு வருட காலத்திற்குள் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஹைட்ரஜன் உற்பத்திக்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன்மூலம் கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் பங்களிக்கும்.

➢ **ஹரியானாவில் நீலகாயை அழிப்பதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது**

✓ நீல காளைகள் என்று அழைக்கப்படும் ஆண் நீலகாய்களை சுட அனுமதிக்கும் புதிய வனவிலங்கு (பாதுகாப்பு) விதிகளை ஹரியானா அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.



✓ இந்த முடிவு வளர்ந்து வரும் மனித-விலங்கு மோதலை, குறிப்பாக விவசாயத்திற்கு நீலகாயினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இருப்பினும், இந்த முடிவு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் குறிப்பாக நீலகாஸை புனிதமாகக் கருதும், பிஷ்னோய் சமூகத்தின் எதிர்ப்பைத் தூண்டியுள்ளது.

✓ இந்த இனத்தை அழிப்பது, இந்தப் பிரச்சினைக்கு நெறிமுறையான தீர்வோ அல்லது நிரந்தரமான தீர்வோ அல்ல என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

➢ **இந்தியாவின் முதல் முதியோர் ஆணையம்**

✓ இந்தியாவின் முதல் முதியோர் ஆணையத்தை கேரளா நிறுவ உள்ளது.




✓ மூத்த குடிமக்களின் உரிமைகள், நலன் மற்றும் சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்து, விரைவாக மூத்த குடிமக்களின் சவால்களுக்கு தீர்வு காண்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 2011இல் 12.6 விழுக்காடாக இருந்த 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் மாநில விகிதம் 2036ஆம் ஆண்டில் 22.8 விழுக்காடாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

✓ கேரளாவில் முதியோர்களின் எண்ணிக்கை 4 விழுக்காடு என்ற ஆண்டு வீதத்தில் அதிகரித்து வருகிறது. இது தேசிய சராசரியான 3.3 விழுக்காட்டை விட அதிகமாகும்.

- ✓ 2036ஆம் ஆண்டுக்குள் கேரளாவில் முதியோர்களின் எண்ணிக்கை 8.4 மில்லியனை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## ➢ நயனாமிர்தம் (Nayanamritham) 2.0


- ✓ கேரளா உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு உந்துதல் பெற்ற, நாள்பட்ட கண்நோய் பரிசோதனைத் திட்டமாகிய ‘நயனாமிர்தம் 2.0’ ஐ அறிமுகம் செய்து வைத்துள்ளது.




- ✓ இந்த முயற்சியானது, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, கண் நோயை முன்கூட்டியே கண்டறிந்து சரிசெய்வதற்கு உதவுகிறது.
- ✓ இதன்மூலம் தரமான கண் பரிசோதனை மாநிலம் முழுவதும் கிடைக்கக் கூடியதாகவும், திறமையானதாகவும் மாறும்.
- ✓ இந்த நயனாமிர்தம் 2.0, கிளாகோமா மற்றும் வயதுமூப்பு தொடர்பான மாகுலர் டிஜெனரேஷன் போன்ற இரண்டு பெரிய நாள்பட்ட கண் நோய்களுக்கு பரிசோதனையை உள்ளடக்கி அதன் நோக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது.
- ✓ இந்த முன்முயற்சியானது சிறந்த நோயாளி பராமரிப்பை வழங்க சுகாதார வழங்குநர்களுக்கு அதிகாரமளிக்கும்.

## ➢ மத்தியப் பிரதேசம் இப்போது இந்தியாவின் அதிக கழுகு எண்ணிக்கையைக் கொண்ட மாநிலமாக விளங்குகிறது

- ✓ வனவிலங்கு பாதுகாப்பில் பெரும் வெற்றியைக் குறிக்கும் வகையில், இந்தியாவில் அதிக கழுகுகள் வாழும் மாநிலமாக மத்தியப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.



- ✓ 2025 கழுகுகள் கணக்கெடுப்பின் முதல் கட்டத்தின்படி, மாநிலத்தில் கழுகுகளின் எண்ணிக்கை 12,981ஐ எட்டியுள்ளது. இது 2024இல் 10,845 ஆகவும், 2019இல் 8,397 ஆகவும் இருந்தது.
- ✓ இந்த நிலையான உயர்வு பல்லாண்டுகளாக செயல்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்திறனுக்குச் சான்றாக விளங்குகிறது.

# தேசிய நிகழ்வுகள்

➢ **ஒன்றிய அரசு பட்ஜெட் 20256-26**

✓ 2025-26ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார்.




✓ நரேந்திர மோடி அரசின் மூன்றாவது முறை ஆட்சியில் இது இரண்டாவது பட்ஜெட் ஆகும்.


✓ 2019ல் பதவியேற்ற பிறகு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ச்சியாக தாக்கல் செய்யும் எட்டாவது பட்ஜெட் தாக்கல் இதுவாகும்.

✓ பிப்ரவரி 1, 2021 அன்று, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் காகிதமில்லாத பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அதிலிருந்து தொடர்ந்து டிஜிட்டல் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

✓ பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதி பிப்ரவரி 13ஆம் தேதி வரையிலும், இரண்டாம் கட்ட கூட்டத்தொடர் மார்ச் 10 ஆம் தேதி முதல் ஏப்ரல் 4 ஆம் தேதி வரையிலும் நடைபெறும்.

➢ **இந்தியாவில் 4 புதிய ராம்சர் தளங்கள் சேர்க்கப்பட்டுள்ளன**

✓ ஒன்றிய அரசு 4 புதிய ராம்சர் தளங்களைச் சேர்ப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து, இந்தத் தளங்களின் எண்ணிக்கை 89 ஆக அதிகரித்துள்ளது.





✓ உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு, தமிழகத்தின் சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம், தேர்த்தங்கள் பறவைகள் சரணாலயம், சிக்கிமின் கெச்சியோபல்ரி சதுப்பு நிலம், ஜார்கண்டில் உள்ள உத்வா ஏரி ஆகியவை ராம்சார் தளங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சம் தெரிவித்துள்ளது.

- ✓ ஆசியாவிலேயே அதிக ராம்சர் தளங்களைக் கொண்ட நாடாகவும், உலக அளவில் அதிக ராம்சர் தளங்களைக் கொண்ட மூன்றாவது நாடாகவும் இந்தியா விளங்குகிறது என்று சுற்றுச் சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ், தெரிவித்தார்.
- ✓ அதிகபட்சமாக 20 ராம்சர் தளங்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளதற்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

## ➢ உலக புத்தகக் கண்காட்சி 2025

- ✓ புதுதில்லி உலகப் புத்தகக் கண்காட்சி 2025 பிப்ரவரி 1 ஆம் தேதி புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்குகிறது.




- ✓ இந்த ஆண்டு, இந்தியக் குடியரசின் 75 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில், ‘இந்திய மக்களாகிய நாம்’ (We the People of India) என்பது இந்தக் கண்காட்சியின் மையக்கருத்தாக உள்ளது.
- ✓ ஒன்பது நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார். நேஷனல் புக் டிரஸ்ட் இக்குநர் யுவராஜ் மாலிக் ஆகாஷ்வானி செய்தி நிறுவனத்திடம் பேசும்போது, இந்த ஆண்டு ரஷ்யா கண்காட்சியில் கவனம் செலுத்தும் நாடாக இருக்கும் என்றும், பிரான்ஸ், அர்ஜென்டினா, ஸ்பெயின், கொலம்பியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவித்தார்.
- ✓ ஏறத்தாழ இரண்டாயிரம் வெளியீட்டாளர்கள் மற்றும் ஆயிரம் பேச்சாளர்கள் கண்காட்சியில் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## ➢ நீர்நிலை யாத்திரை




- ✓ பிரதமரின் கிரிஷி சிஞ்சாயீ யோஜனாவின் (Watershed Development Component of Pradhan Mantri Krishi Sinchayee Yojana - WDC-PMKSY 2.0) நீர்நிலை மேம்பாட்டுக்

கூறுகளின்கீழ் நீர்நிலை மேம்பாட்டு நடவடிக்கைகளில் விழிப்புணர்வையும் செயலில் பங்கேற்பதையும் மேம்படுத்துவதற்காக, பிப்ரவரி 4, 2025 அன்று, ஒன்றிய அமைச்சர் திரு சிவராஜ் சிங் கௌஹான், தேசிய அளவிலான வெகுஜன பரப்புரையான 'நீர்நிலை யாத்திரை'யைத் தொடங்கி வைத்தார்.

- ✓ இந்தப் பிரச்சாரமானது மண் மற்றும் நீர் பாதுகாப்பு முயற்சிகளில் மக்களை ஈடுபடுத்துவதையும், நிலையான இயற்கை வள மேலாண்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் இந்தியா முழுவதும் விவசாய உற்பத்தி, வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் ஆரோக்கியம் மேம்படுகிறது.

## ➢ இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு பல்கலைக் கழகம்

- ✓ மகாராஷ்டிரா, இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு பல்கலைக் கழகத்தை நிறுவ உள்ளது. இது செயற்கை நுண்ணறிவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை முன்னேற்றுவதில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க படியாகும்.




- ✓ கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசாங்கத்தின் நிபுணர்களை ஒன்றிணைத்து, திட்டத்தைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்காக, ஒரு பணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தப் பல்கலைக் கழகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துதல், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல், திறன் மேம்பாட்டை ஆதரித்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு கொள்கைகளை வடிவமைத்தல், மகாராஷ்டிராவை செயற்கை நுண்ணறிவு கல்வி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ திட்டமிடல் மற்றும் செயலாக்கப்ப பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு பணிக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

## ➢ சூரிய மின்சக்தியில் 100 ஜிகா வாட்

- ✓ 100 ஜிகா வாட் என்ற நிறுவப்பட்ட சூரிய சக்தி திறனையும் தாண்டி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் உலகத் தலைவராக தன் நிலையை வலுப்படுத்துவதன்மூலம் இந்தியா ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.




- ✓ இது 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் திறனை எட்டும் இலட்சிய இலக்கை அடைவதற்கான குறிப்பிடத்தக்க படியாகும்.
- ✓ சூரியசக்தித் தகடுகள், சூரிய சக்தி பூங்காக்கள் மற்றும் மேற்கூரை சூரியசக்தி திட்டங்கள் போன்ற முன்முயற்சிகள் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் பிரஹலாத் ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.
- ✓ 2014ஆம் ஆண்டில், நாட்டின் வரையறுக்கப்பட்ட சூரிய சக்தி உற்பத்தித் திறன் வெறும் 2 ஜிகாவாட் மட்டுமே இருந்தது. இது கடந்த பத்தாண்டுகளில், 2024இல் 60 ஜிகா வாட்டாக உயர்ந்து, சூரிய சக்தி உற்பத்தியில் இந்தியாவை உலகத் தலைவராக நிலைநிறுத்தியுள்ளது.

## ➢ 2025இல் இந்தியா முதல் பிராந்திய சமூக நீதி பேச்சுவார்த்தையை நடத்த உள்ளது

- ✓ 2025 பிப்ரவரி 24-25 தேதிகளில், புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், சமூக நீதிக்கான உலகளாவிய கூட்டணி பற்றிய முதல் பிராந்திய பேச்சு வார்த்தையை இந்தியா நடத்த உள்ளது.



- ✓ இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) மற்றும் இந்திய முதலாளிகள் கூட்டமைப்பு (Employers' Federation of India) ஆகியவற்றுடன் இணைந்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, உலகளாவிய பங்குதாரர்களை ஒன்றிணைத்து உள்ளடக்கிய மற்றும் நிலையான சமூகக் கொள்கைகளைப் பற்றி விவாதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ புதிய வருமான வரி மசோதா, 2025

- ✓ புதிய வருமான வரி மசோதா 2025 இந்தியாவின் வருமான வரி கட்டமைப்பை நவீனமயமாக்குவதையும் எளிமைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




- ✓ இந்த மசோதா ஏப்ரல் 1, 2026 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. இது, தற்போதுள்ள வரி விகிதங்கள் மற்றும் கொள்கைகளைப் பராமரித்து, பல மாற்றங்களையும் அறிமுகப்படுத்துகிறது.
- ✓ இது வரி செலுத்துவோர் தெளிவு, ஒத்திசைவு மற்றும் எளிதில் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. தற்போதைய வரிச் சட்டத்தில் நீண்ட கால சிக்கல்களை நிவர்த்தி செய்கிறது.
- ✓ இந்த மசோதா மூன்று அடிப்படைக் கொள்கைகளால் வழிநடத்தப்படுகிறது – அவை, மொழி மற்றும் கட்டமைப்பை எளிமைப்படுத்துதல், வரிக் கொள்கையில் தொடர்ச்சி மற்றும் ஏற்கனவே உள்ள வரி விகிதங்களைப் பாதுகாத்தல்

APOLLO STUDY CENTRE

# திட்டங்கள்

➢ **திறன் இந்தியா திட்டம் (Skill India Programme)**

✓ பிப்ரவரி 7 அன்று, 2022-23 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்திற்கு ரூ.8,800 கோடி செலவில், 2026 வரையிலான ‘திறன் இந்தியா திட்டத்தின்’ தொடர்ச்சி மற்றும் மறுசீரமைப்புக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.




✓ பிரதமரின் கௌசல் விகாஸ் யோஜனா (Pradhan Mantri Kaushal Vikas Yojana) 4.0, பிரதமரின் தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (Pradhan Mantri National Apprenticeship Promotion Scheme), மற்றும் ஜன் ஷிக்ஷன் சன்ஸ்தான் திட்டம் (Jan Shikshan Sansthan) ஆகிய மூன்று கூறுகளை ஒன்றிய அரசு, ஒருங்கிணைந்த மத்திய துறைத் திட்டமான திறன் இந்தியா திட்டத்தின்கீழ் இணைத்துள்ளது.

✓ கட்டமைக்கப்பட்ட திறன் மேம்பாடு, வேலையில் பயிற்சி மற்றும் சமூக அடிப்படையிலான கற்றல் ஆகியவற்றை வழங்குவதற்காக அரசு இந்த முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. இது விளிம்புநிலை சமூகங்கள் உள்ளிட்ட நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் உயர்தர தொழிற்கல்விக்கான அணுகலை உறுதி செய்கிறது.

➢ **மின்னணு-பேச்சுவார்த்தை கிடங்கு ரசீதுகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்**

✓ விவசாயிகளுக்கான கடன் வசதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு அறிவித்துள்ளது.




✓ விவசாய நிதியுதவியை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு, மின்னணு-பேச்சுவார்த்தை கிடங்கு ரசீதுகளுக்கான (electronic-Negotiable Warehouse Receipts - e-NWRs) கடன் உத்தரவாதத் திட்டத்திற்கு ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

- ✓ இந்த முயற்சி டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாகும். இது இ-கிசான் உபஜ்நிதி (இ-குன்) திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது.
- ✓ இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு மின்னணு-பேச்சுவார்த்தை கிடங்கு ரசீதுகள்மூலம் குறைந்த வட்டியில் கடன்களை வழங்குகிறது. இது அவர்களை துயர விற்பனையிலிருந்து பாதுகாக்கிறது.

- **பிங்க் ஆட்டோ திட்டம்: விதிகளைத் திருத்தும் மாநில அரசு**
- ✓ பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் சென்னையில் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் அறிமுகப்படுத்தப்படும் என சமூக நலத்துறை அமைச்சர் ப. கீதாஜீவன் அறிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989-ல் திருத்தம் செய்ய மாநில அரசு முன்வந்துள்ளது.



- ✓ இந்த வரைவுத் திருத்தத்தின்படி, சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையின் 'பிங்க் ஆட்டோ திட்டத்தின்கீழ்'' சொந்தமாக ஆட்டோ வைத்திருக்கும் மற்றும் ஆட்டோக்களை இயக்கும் பெண் ஓட்டுநர்களுக்கு இந்த முயற்சி உதவி செய்யும்.
- ✓ பெண் பயணிகள் பாதுகாப்பாக பயணிக்க இந்த ஆட்டோரிக்‌ஷாக்கள் உதவும் என்று அவர் குறிப்பிட்டார்..

# சர்வதேச நிகழ்வுகள்

➢ **சர்வதேச பெரிய பூனைக் கூட்டணி அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது**

- ✓ சர்வதேச பெரிய பூனைக் கூட்டணி (International Big Cat Alliance) ஒப்பந்த அடிப்படையிலான, அரசுகளுக்கு இடையேயான அமைப்பாக அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.




- ✓ வனவிலங்கு பாதுகாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் வகையில் ஐந்து நிறுவன நாடுகள் இந்த கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ✓ பிப்ரவரி 29, 2024 அன்று இந்திய ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு இந்த சர்வதேச பெரிய பூனைக் கூட்டணி உருவாக்கப்பட்டது.
- ✓ இதன் தலைமையகம் இந்தியாவில் அமைந்துள்ளது.
- ✓ தற்போது 27 நாடுகள் இந்தக் கூட்டணியில் இணைவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.
- ✓ புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, சீத்தா, ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய ஏழு பெரிய பூனைகளைப் பாதுகாப்பதே இந்தக் கூட்டணியின் முதன்மை குறிக்கோளாகும்.

➢ **இந்தியப் பெருங்கடல் மூலோபாய முயற்சி (Indian Ocean Strategic Venture)**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் குவாட் குழுவின்கீழ் புதிய முயற்சிகளைச் செயல்படுத்துவார்கள்.



- ✓ இந்தியப் பெருங்கடல் மூலோபாய முயற்சி என்ற ஒரு புதிய இருதரப்பு மன்றத்தை பிரதமர் மோடியும் அதிபர் டிரம்பும் தொடங்கினர்.
- ✓ பொருளாதார இணைப்பு மற்றும் வர்த்தகத்தில் முன்கூட்டியே ஒருங்கிணைந்த முதலீடுகளுக்கான மன்றமாக இது இருக்கும்.

- ✓ மேற்கு இந்தியப் பெருங்கடல், மத்திய கிழக்கு மற்றும் இந்தோ-பசிபிக் ஆகிய பகுதிகளில், புதிய பலதரப்பு கூட்டாண்மைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் அங்கீகரித்தனர்.
- ✓ குவாட் குழுவில் இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகியவை அடங்கியுள்ளன.

## ➢ வங்காள விரிகுடா அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கிறது

- ✓ இந்தியா சமீபத்தில், வங்காள விரிகுடா – அரசுகளுக்கு இடையேயான அமைப்பின் (Bay of Bengal Inter-Governmental Organisation) தலைமைப் பொறுப்பை வங்காளதேசத்திடம் இருந்து ஏற்றுக் கொண்டது.



- ✓ மாலத்தீவின் மாலேயில் நடைபெற்ற 13வது ஆளும் குழு கூட்டத்தின்போது இந்த மாற்றம் ஏற்பட்டது.
- ✓ வங்காள விரிகுடா - அரசுகளுக்கு இடையேயான அமைப்பு 2003இல் நிறுவப்பட்டது.
- ✓ வங்காள விரிகுடா பகுதியில் சிறு-குறு மீனவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதில் உறுப்பு நாடுகளுக்கு உதவுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- ✓ தற்போதைய உறுப்பு நாடுகளில் வங்காளதேசம், மாலத்தீவு மற்றும் இலங்கை ஆகியவை அடங்கும்.

## ➢ தங்க அட்டை முதலீட்டாளர் விசா திட்டம்

- ✓ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தற்போதுள்ள ஈபி-5 விசாவிற்குப் பதிலாக, பணக்கார குடியேறிகளுக்கான புதிய தங்க அட்டை முதலீட்டாளர் விசா திட்டத்தை அறிவித்துள்ளார்.




- ✓ ஓவல் அலுவலகத்தில் பேசிய டிரம்ப், வேலை விசா மற்றும் கிரீன் அட்டைகளின் நிச்சயமற்ற தன்மையைச் சமாளிக்க மிகவும் திறமையான ஊழியர்களுக்கு 5 மில்லியன் டாலர்கள் செலுத்தி குடியேற்ற தங்க அட்டைகளை நிறுவனங்கள் வழங்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

- ✓ அவர் இந்த முயற்சியை பச்சை அட்டை சலுகைகள் மற்றும் பச்சை அட்டை அமைப்பிலிருந்து மேம்படுத்துதல் என்று விவரித்தார்.

APOLLO STUDY CENTRE

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ்**
- ✓ தமிழ்க் கவிஞரும் தத்துவஞானியுமான திருவள்ளுவரின் சிலை பிலிப்பைன்சில் திறக்கப்பட்டுள்ளது.



- ✓ இந்தியாவிற்கும், பிலிப்பைன்சிற்கும் இடையே தூதரக உறவுகளை நிறுவியதன் 75 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், செபுவில் உள்ள குல்லாஸ் மருத்துவக் கல்லூரியில் இதற்கான அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியிடப்பட்டது.
- ✓ இந்திய தூதர் ஹர்ஷ் குமார் ஜெயின் சிலையைத் திறந்து வைத்து, கல்லூரியில் நடைபெற்ற இந்திய – பிலிப்பைன்ஸ் கலாச்சார மற்றும் கல்வி பரிமாற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொண்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- **இந்தியாவும் அமெரிக்காவும் இருதரப்பு வர்த்தகத்தை 500 பில்லியன் டாலராக இருமடங்காக 2030க்குள் அதிகரிக்கும்**
- ✓ 2025 இலையுதிர்காலத்தில் வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் பிரிவு பேச்சுவார்த்தையை நடத்த இந்தியாவும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டன. இந்தியா அமெரிக்காவிடம் இருந்து எரிசக்தி கொள்முதலை அதிகரிக்க விரும்புகிறது.




- ✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாஷிங்டனில் இருதரப்பு கலந்துரையாடலுக்காக அதிபர் டிரம்பை சந்தித்தபோது. இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை குறித்து அதிபர் டொனால்டு டிரம்ப் கவலை தெரிவித்தார்.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **பிம்ஸ்டெக் (BIMSTEC) இளைஞர் உச்சி மாநாடு 2025**

✓ பிம்ஸ்டெக் இளைஞர் உச்சி மாநாடு 2025 குஜராத்தின் காந்தி நகரில் தொடங்கியது.




✓ பிம்ஸ்டெக் இளைஞர் உச்சி மாநாடு 2025 பிப்ரவரி 7 முதல் 11 வரை நடைபெறும்.

✓ பிம்ஸ்டெக் இளைஞர் உச்சி மாநாடு பிரிக்ஸ் நாடுகளின் இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களின் அனுபவங்களையும் நுண்ணறிவுகளையும் பரிமாறிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த உச்சி மாநாடு 'இளைஞர்கள் உள் - பிம்ஸ்டெக் பரிமாற்றத்திற்கான பாலம்' (Youth as a Bridge for Intra-BIMSTEC Exchange) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்படுகிறது.

✓ பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன் முயற்சி (The Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation - BIMSTEC) என்பது இந்தியா, வங்காளதேசம், மியான்மர், இலங்கை, தாய்லாந்து, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் ஒரு பிராந்திய அமைப்பாகும்.

➢ **பாரிஸ் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு**

✓ பாரிஸ் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை, இந்திய மற்றும் பிரான்ஸ் நாடுகள் இணைந்து பாரிஸில் உள்ள கிராண்ட் போலரிசில் நடத்தின.




✓ இந்தப் பிரகடனத்தின் நோக்கம் தவறான பயன்பாட்டை (பயங்கரவாதம், குற்றம்) தடுக்க எல்லைப்புற செயற்கை நுண்ணறிவு அமைப்புகளை (மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு) ஒழுங்குபடுத்துவதே ஆகும்.

- ✓ பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஆகியோர் கூட்டாகத் தலைமை தாங்கிய இந்த மாநாட்டில் 90க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.
- ✓ இந்த உச்சி மாநாட்டின்போது பிரான்ஸ் அதிபர் மக்ரோன் தொழில்நுட்ப இறையாண்மையை வலியுறுத்தினார்.

## ➢ இந்தியா அடுத்த உலகளாவிய செயற்கை நுண்ணறிவு மாநாட்டை நடத்த உள்ளது

- ✓ பாரிசில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் நடைபெற்ற விவாதங்களைத் தொடர்ந்து, அடுத்த உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை இந்தியா நடத்தும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.




- ✓ பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் ஆகியோர் இணைந்து நடத்திய இந்த உச்சி மாநாடு, செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியில் உலகளாவிய ஒத்துழைப்பை வளர்ப்பதில் கவனம் செலுத்தியது.
- ✓ செயற்கை நுண்ணறிவில் இந்தியாவின் தலைமைத்துவம், உள்ளடக்குவதற்கான அதன் அர்ப்பணிப்பு மற்றும் முக்கிய செயற்கை நுண்ணறிவு முன் முயற்சிகளை நிறுவுதல் ஆகியவை இந்த நிகழ்வின்போது எடுத்துரைக்கப்பட்டன.

## ➢ உலக அரசாங்க உச்சி மாநாடு 2025 (World Government Summit 2025)

- ✓ உலக அரசாங்க உச்சி மாநாடு 2025, பிப்ரவரி 10, 2025 அன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் தொடங்கியது.




- ✓ உச்சி மாநாட்டின் இந்த 12வது பதிப்பு 'எதிர்கால அரசுகளை வடிவமப்பது' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டது.
- ✓ இதில் 30க்கும் மேற்பட்ட நாட்டுத் தலைவர்கள் மற்றும் 400க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் இதுவரை இல்லாத அளவாக சர்வதேச அளவில் கலந்து கொண்டனர்.

- ✓ இந்த நிகழ்வு பிப்ரவரி 14 வரை நடைபெறும். இது பல்வேறு மன்றங்களின் ஆளுமை, புதுமை மற்றும் நிலையான வளர்ச்சியில் உள்ள முக்கியமான சிக்கல்களைத் தீர்க்கிறது.

## ➢ இந்தியப் பெருங்கடல் மாநாடு 2025

- ✓ இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் 8வது பதிப்பு மஸ்கட்டில் பிப்ரவரி 16-17, 2025இல் தொடங்கியது.




- ✓ இந்த ஆண்டின் கருப்பொருள் கடல்சார் கூட்டாண்மைக்கான புதிய எல்லைகளுக்குப் பயணம் என்பதாகும்.
- ✓ இந்த மாநாடு கடல்சார் துறையில் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதையும் புதிய கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இதில் 60க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களில் இருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.
- ✓ இது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் மூலோபாய முக்கியத்துவத்தையும் கூட்டுத் தீர்வுகளின் அவசியத்தையும் பிரதிபலிக்கிறது.

## ➢ கழிவு மறுசுழற்சி மற்றும் காலநிலை மாற்றம் 2025 மாநாடு

- ✓ பிப்ரவரி 18, 2025 அன்று, இந்திய மறுசுழற்சி மற்றும் சுற்றுச் சூழல் தொழில் சங்கம் (Recycling and Environment Industry Association of India) ஏற்பாடு செய்திருந்த 'கழிவு மறுசுழற்சி மற்றும் காலநிலை மாற்றம் 2025' மாநாட்டை ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் ஸ்ரீபூபேந்தர் யாதவ் தொடங்கி வைத்தார்.




- ✓ கழிவுகளை மறுசுழற்சி செய்வது எப்படி சுற்றுச் சூழல் நிலைத்தன்மை மற்றும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் என்பதில் இந்த நிகழ்வு கவனம் செலுத்தியது.

✓ சுற்றுப் பொருளாதாரத்திற்கு மாறுவதன் முக்கியத்துவத்தை அமைச்சர் எடுத்துரைத்தார். இது கழிவுகளைக் குறைக்கவும், வளத் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும் முடியும்.

## ➢ உலகளாவிய முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு

✓ பிப்ரவரி 24 அன்று, மத்தியப் பிரதேசத்தின் போபாலில் பிரதமர் நரேந்திர மோடி, உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.




✓ இந்த இரண்டு நாள் உச்சி மாநாட்டில் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள். தொழில், திறன் மேம்பாடு, சுற்றுலா மற்றும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் போன்ற துறைசார் உச்சி மாநாடுகள் மற்றும் சிறப்பு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

✓ உலகளாவிய தென் நாட்டு மாநாடு (Global South Country Conference,), லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் அமர்வு மற்றும் முக்கிய கூட்டாளர் நாடுகளுக்கான சிறப்பு அமர்வுகள் போன்ற சர்வதேச அமர்வுகளும் இதில் அடங்கும்.

✓ இந்த உச்சி மாநாட்டின்போது மூன்று முக்கிய தொழில்துறை கண்காட்சிகள் நடத்தப்பட்டன: அவை ஆட்டோ ஷோ, டெக்ஸ்டைல் - ஃபேஷன் எக்ஸ்போ மற்றும் ‘ஒரு மாவட்டம் - ஒரு தயாரிப்பு’ கிராமம் ஆகும்.

## ➢ பெண்அமைதிப்படை வீராங்கனைகளுக்கான முதல் மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது

✓ ‘அமைதி காக்கும் பெண்கள் ஒரு உலகளாவிய தெற்கு கண்ணோட்டம்’ என்ற தலைப்பில் இந்த மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.



- ✓ பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் மையம் ஆகியவற்றுடன் இணைந்து வெளியுறவு அமைச்சகம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- ✓ உலகளாவிய தெற்கில் இருந்து, துருப்புகளை அனுப்பும் 35 நாடுகளைச் சேர்ந்த அமைதி காக்கும் பெண்களின் பங்கேற்பை இந்த மாநாடு ஒருங்கிணைக்கிறது.

➢ **பிரக்ருதி 2025: இந்தியாவின் கார்பன் சந்தையை முன்னேற்றுதல்**

- ✓ கார்பன் சந்தைகள் பற்றிய முதல் சர்வதேச மாநாடு, பிரக்ருதி 2025, பிப்ரவரி 24-25, 2025 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இது இந்தியாவின் காலநிலை நடவடிக்கை மூலோபாயத்தில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது.




- ✓ இந்தியாவின் கார்பன் சந்தைகளின் எதிர்காலம் குறித்து விவாதிப்பதற்காக கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சர்வதேச வல்லுநர்கள் உட்பட 600க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை ஒன்றிணைத்த இந்த நிகழ்வை, மின்சக்தி அமைச்சகத்தின்கீழ் உள்ள எரிசக்தி திறன் பணியகம் ஏற்பாடு செய்திருந்தது.

➢ **பாரத் அழைப்பு மாநாடு 2025: விக்சித் பாரத் 2047க்கான ஒரு பார்வை**

- ✓ இந்தியாவின் பொருளாதார எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ஸ்ரீபியூஸ் கோயல், மும்பையில் ஐஎம்சி வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பாரத் அழைப்பு மாநாடு 2025' ஐத் தொடங்கி வைத்தார்.




- ✓ 'விக்சித் பாரத் 2047க்கான பாதை: அனைவருக்கும் முன்னோடி செழிப்பு' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த மாநாடு, உலகப் பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முக்கிய பங்கையும், முன்னணி முதலீட்டு இடமாக அதன் திறனையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

- ✓ ஒரு நெகிழ்ச்சியான பொருளாதாரம், ஒரு பெரிய நுகர்வோர் சந்தை மற்றும் வணிக நட்பு அரசாங்கக் கொள்கைகளுடன், இந்தியா பல்வேறு துறைகளில் முதலீடுகளை ஈர்க்க உள்ளது.

APOLLO STUDY CENTRE

# பாதுகாப்பு

➢ **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (DRDO), VSHORAD அமைப்பை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது**

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், குறைந்த உயரம், அதிவேக அச்சுறுத்தல்களைக் குறி வைத்து, மிக குறுகிய தூர வான்பாதுகாப்பு (Very Short-Range Air Defence - VSHORAD) அமைப்பின் மூன்று தொடர்ச்சியான வெற்றிகரமான ஏவுகணை சோதனைகளை நடத்தியது.




✓ இந்த ஏவுகணை, குறைந்த தொலைவில் பறக்கும் ட்ரோகன்களைப் பிரதிபலிக்கும் இலக்குகளை இடைமறித்து அழித்து, துல்லியம் மற்றும் செயல்திறனை வெளிப்படுத்தியது.

✓ இந்த அமைப்பின் தயார்நிலை மற்றும் திறனைக் காட்டும் இறுதி வரிசைப்படுத்தல் உள்ளமைவில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

➢ **இந்தியா – மாலத்தீவு ராணுவப் பயிற்சி ‘எகுவெரின்’: இருதரப்பு பாதுகாப்பை வலுப்படுத்துகிறது**

✓ இந்தியா- மாலத்தீவுகள் கூட்டு இராணுவப் பயிற்சியின் 13வது பதிப்பு ‘எகுவெரின்’ 2025 பிப்ரவரி 2-25 வரை மாலத்தீவுகளால் நடத்தப்படுகிறது.





✓ இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையில் மாறி மாறி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தப் பயிற்சியானது. இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு மூலக்கல்லாகும்.

✓ 13வது ஏகுவெரின் பயிற்சியின் தொடக்க விழா 2 பிப்ரவரி 2025 அன்று மாலத்தீவு, மாஃபிலாஃபுஷியில் (Maafilaafushi) உள்ள மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படைகளின்

(Maldives National Defence Forces) அதிகாரப்பூர்வ கூட்டுப் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

➢ **ட்ராபெக்ஸ் (TROPEX) பயிற்சி**

✓ இந்திய கடற்படையின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கேப்ஸ்டோன் தியேட்டர் லெவர் செயல்பாட்டுப் பயிற்சி (Theatre Level Operational Exercise - TROPEX), தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஜனவரி முதல் மார்ச் வரை நடத்தப்படுகிறது.




✓ இந்தப் பயிற்சியில் சுமார் 65 இந்திய கடற்படைக் கப்பல்கள், ஒன்பது நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் பல்வேறு வகையான 80க்கும் மேற்பட்ட விமானங்கள் ஆகியவை கலந்து கொள்கின்றன.

✓ கடற்படை, விமானப்படை மற்றும் கடலோர காவல் படையின் அனைத்து செயல்பாட்டுப் பிரிவுகளின் கணிசமான பங்கேற்புடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. ட்ரோபெக்ஸ் 25 இந்திய கடற்படையின் முக்கிய போர் திறன்களைச் சரிபார்த்து அதன் செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **கூட்டு இராணுவப் பயிற்சி 'சைக்ளோன் 2025'**

✓ இந்தியா மற்றும் எகிப்து இடையே ஒரு குறிப்பிடத்தக்க இராணுவ ஒத்துழைப்பு, 'சைக்ளோன் 2025' என்ற கூட்டுப் பயிற்சியின் தொடக்கத்துடன் தொடங்கியது.




✓ ராஜஸ்தானில் உள்ள மஹாஜன் ஃபீல்டு ஃபையரிங் ரேஞ்சில் நடைபெறும் இந்தப் பயிற்சி 14 நாட்களுக்கு நடைபெறும்.

- ✓ இந்தப் பயிற்சியானது, இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், சவாலான பாலைவன சூழல்களில் தொழில்முறை திறன்களைப் பகிர்ந்து கொள்ளும் அதே வேளையில் சிறப்புப் படைகளின் இயங்குதன்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

## ➢ இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படையின் செயல் பிரிவு, கிழக்கு தியேட்டரில் 'விங்கிடு ரைடரை' நடத்துகின்றன.

- ✓ இந்திய இராணுவமும் இந்தியா விமானப்படையும் இணைந்து கிழக்கு தியேட்டரில் 'விங்கிடு ரெய்டர்' (Winged Raider) என்ற கூட்டு இராணுவப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தின.




- ✓ இந்த மூலோபாய பயிற்சியானது இரு படைகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக சிறப்பு வான்வழி நடவக்கைகளில் கவனம் செலுத்தியது.
- ✓ ஒரு முக்கிய செயல்பாட்டு மண்டலத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சியானது, விரைவான வரிசைப்படுத்தல் திறன்கள் மற்றும் சேவைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

## ➢ 5வது பலதரப்பு கடற்படைப் பயிற்சியாகிய கொமோடோ இந்தோனேசியாவின் தொடங்கியது

- ✓ ஐஎன்எஸ் ஷர்துல் மற்றும் P81 ஆகியவை கடல்சார் இயக்கத்தை மேம்படுத்துவதற்கான பலதரப்பு கடற்படைப் பயிற்சியான கொமோடோ பயிற்சியில் இணைந்தன.




- ✓ இந்தோனேசியாவின் பாலி தீவு மாகாணத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் துருக்கி உட்பட 39 நாடுகள் பங்கேற்றன.
- ✓ 'அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான கடல்சார் கூட்டாண்மை' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தப் பயற்சியானது இருபதாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நகிழ்வின் ஐந்தாவது பதிப்பாகும்.

- ✓ முதல் கொமோடோ பயிற்சி 2014இல் இந்தோனேசியாவில் நடைபெற்றது.

### ➢ கடலோர பாதுகாப்புக்கான ‘சாகர் கவாச்’ பயிற்சி

- ✓ இந்திய கடலோர காவல் படையானது, பிப்ரவரி 21-22, 2025 அன்று 158 கிமீ மேற்கு வங்க கடற்கரையில் ‘சாகர் கவாச்’ பாதுகாப்பு பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியது.




- ✓ இந்த இரண்டு நாள் நடவடிக்கையானது, உருவகப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதில் பல முகமைகளை ஈடுபடுத்துவதன்மூலம் கடலோரப் பாதுகாப்பு பொறிமுறையை சோதித்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ✓ இந்தப் பயிற்சியானது இந்தியாவின் கிழக்கு கடல் எல்லையில் சாத்தியமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedures) செயல்படுத்துதல் மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

### ➢ இராணுவப் பயிற்சி ‘ஜல்-தல்-ரக்ஷா (Jal-Thal-Raksha) 2025’

- ✓ இந்திய இராணுவம், இந்திய கடலோர காவல்படை மற்றும் கடல்சார் காவல்துறையுடன் இணைந்த, குஜராத்தின் பெட் துவாரகாவில் ‘ஜல்-தல்-ரக்ஷா 2025’ என்ற பெரிய அளவிலான இராணுவப் பயிற்சியை நடத்தியது.




- ✓ தீவு பாதுகாப்பு, சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை எதிர்த்துப் போராடுதல் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்த ஒத்திகை கவனம் செலுத்தியது.
- ✓ இந்தப் பயிற்சியில் ஹோவர்கிரா.ஃ.பட் தரையிறக்கங்கள். முக்கியமான உள்கட்டமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உருவகப்படுத்தப்பட்ட பதில்கள், சாத்தியமான அபாயங்களுக்கு எதிராக தயார்நிலையை உறுதி செய்தல் ஆகியவை இடம் பெற்றன.

# பொருளாதாரம்

➢ **ஒன்றிய பட்ஜெட் 2025-26**

✓ ஒன்றிய நிதியமைச்சர் 2025-26 ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டை 'சப்கவிகாஸ்' (SabkaVikas) என்ற கருப்பொருளுடன் தாக்கல் செய்தார்.

✓ விரிவிதிப்பு, மின்துறை, நகர்ப்புற மேம்பாடு, சுரங்கம், நிதித்துறை மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதை இந்த பட்ஜெட் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ விவசாயம், குறு சிறு நடுத்தர தொழில்கள், முதலீடு மற்றும் ஏற்றுமதி ஆகியவை விக்சித் பாரத் பயணத்தின் இயந்திரங்கள் என்பதை இந்த ஒன்றிய பட்ஜெட் எடுத்துக்காட்டுகிறது.




✓ முக்கிய அம்சங்கள்:

1. நிதியமைச்சர் 2025-26 ஒன்றிய பட்ஜெட்டை 'சப்கவிகாஸ்' என்ற கருப்பொருளுடன் சமர்ப்பித்தார்.
2. அரசாங்க இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 விழுக்காடு நிதிப்பற்றாக்குறை.
3. 12 இலட்சம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கப்படாது என்று நிதியமைச்சர் அறிவித்தார்.
4. கிக் (gig) தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு யுபிஐ-இணைப்புடன்கூடிய கிரெடிட் கார்டுகளை அறிமுகப்படுத்த நிதியமைச்சர் முன்மொழிந்தார்.
5. இரயில்வே அமைச்சகம் 'ஸ்வாரயில்' (SwaRail) என்ற சூப்பர் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
6. பருப்பு வகைகளில் ஆத்மநிர்பர்தாவுக்கான 6 ஆண்டு பணியை ஒன்றிய அரசு தொடங்கும்.
7. மாநிலங்களுடன் இணைந்து ஒரு விரிவான பல்துறை 'கிராமிய செழிப்பு மற்றும் மீள்தன்மை' திட்டம் தொடங்கப்படும்.
8. 2025 பட்ஜெட்டில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஒவ்வொரு மாவட்டத்திலும் புற்றுநோய் மையம் நிறுவப்படும் என்று அறிவித்தார்.
9. கிசான் கடன் அட்டைகள் மூலம் பெறப்படும் கடனுக்கான வரம்புகள் 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்தப்படும் என்று அரசு அறிவித்தார்.
10. 5 இலட்சம் பெண்கள், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரை முதல் முறையாக தொழில்முனைவோர்கள் ஆக்குவதற்கான புதிய திட்டத்தையும் அரசு தொடங்க உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2 கோடி கடன்கள் வழங்கப்படும்.

11. 'மேட் இன் இந்தியா' பிராண்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொம்மைகளுக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை உருவாக்கும் திட்டத்தையும் அரசு தொடங்கும்.
12. உலகளாவிய நிபுணத்துவம் மற்றும் கூட்டாண்மைகளுடன் ஐந்து தேசிய திறன் மையங்கள் அமைக்கப்படும்.
13. கல்விக்கான செயற்கை நுண்ணறிவு உயர் சிறப்பு மையம் 500 கோடி செலவில் அமைக்கப்படும்.
14. கல்வி நிறுவனங்களில் 1 கோடிக்கும் அதிகமான கையெழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்து, ஆவணப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்காக இந்த பட்ஜெட் ஞானபாரதம் இயக்கத்தை முன்மொழிந்துள்ளது.

➢ **2025-26 பாலின பட்ஜெட்: உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய ஒரு படி**




✓ பிப்ரவரி 1, 2025 அன்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்த ஒன்றிய அரசு பட்ஜெட் 2025-26இல், பாலின பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 2024-25 நிதியாண்டில் 6.8 விழுக்காடாக இருந்த பாலின பட்ஜெட் ஒதுக்கீட்டின் பங்களிப்பு நடப்பு ஒன்றிய பட்ஜெட்டில் 8.86 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

✓ பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான ஒதுக்கீடு ரூ.4.49 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டில் ரூ.3.27 இலட்சம் கோடியிலிருந்து 37.25 விழுக்காடு அதிகரித்துள்ளது.

✓ மேலும், 49 அமைச்சகங்கள்-துறைகள் மற்றும் 5 யூனியன் பிரதேசங்கள், பாலினம் சார்ந்த ஒதுக்கீடுகளைத் தெரிவித்துள்ளன. இதன்மூலம் பாலின பட்ஜெட் அறிக்கைக்கு அதன் தொடக்கத்திலிருந்தே அதிக பங்களிப்பாளர்கள் உள்ளனர் என்பது தெளிவாகிறது.

➢ **ரெப்போ விகிதம் 25 அடிப்படைப் புள்ளிகள் குறைக்கப்பட்டது.**

✓ ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு, ரெப்போ விகிதத்தை 25 அடிப்படைப் புள்ளிகள் குறைத்து 6.25 விழுக்காடாக அறிவித்துள்ளது.




- ✓ இது கிட்டத்தட்ட 5 ஆண்டுகளில் முதல் விகிதக் குறைப்பைக் குறிக்கிறது.
- ✓ நிலையான வைப்பு வசதி (Standing Deposit Facility) விகிதம் 6 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ✓ விளிம்பு நிலை வசதி (Marginal Standing Facility) விகிதம் மற்றும் வங்கி வட்டி விகிதம் 6.50 விழுக்காடாகும். மத்திய வங்கி கடைசியாக மே 2020இல் ரெப்போ விகிதத்தைக் குறைத்தது. அப்போது விலைகள் 40 அடிப்படைப் புள்ளிகள் குறைந்து 4 விழுக்காடாக இருந்தன.

- ➢ **நகர்ப்புற வேலையின்மை விகிதம் 2025 மூன்றாம் காலாண்டில் 6.4 விழுக்காட்டில் நிலையாக உள்ளது**




- ✓ பிப்ரவரி 18, 2025 அன்று புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்ட சமீபத்திய காலமுறை தொழிலாளர் படை (Periodic Labour Force Survey) கணக்கெடுப்பின்படி, 2025 நிதியாண்டில் அக்டோபர் - டிசம்பர் காலாண்டில் இந்தியாவில் நகர்ப்புற வேலையின்மை விகிதம் 6.4 விழுக்காடு ஆக இருந்தது.
- ✓ இது 2025ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 6.6 விழுக்காட்டிலிருந்து 2025 இரண்டாம் காலாண்டில் 6.4 விழுக்காடாக குறைந்ததைத் தொடர்ந்து, நகர்ப்புறங்களில் நிலையான வேலைவாய்ப்பு நிலைமையைக் குறிக்கிறது.

- ➢ **இந்தியாவின் ஸ்மார்ட்போன் ஏற்றுமதி 1.5 டிரில்லியன் ரூபாயை எட்டுகிறது. பிஎல்ஐ அதிகரிப்பே இதற்குக் காரணம் ஆகும்**
- ✓ இந்தியாவின் ஸ்மார்ட்போன் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவாக ஏப்ரல் 2024 முதல் ஜனவரி 2025 வரையிலான காலகட்டத்தில் ரூ.1.55 டிரில்லியன் என்ற அளவை எட்டியது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 991.2 பில்லியன் ஏற்றுமதியானது. இது 56 விழுக்காடு உயர்வு ஆகும்.




- ✓ இந்த வளர்ச்சி முதன்மையாக உற்பத்தி - இணைந்த ஊக்கத்தொகை (Production-Linked Incentive - PLI) திட்டத்தால் தூண்டப்பட்டது. இது இந்தியாவின் ஸ்மார்ட்போன் உற்பத்தி சுற்றுச் சூழலை வலுப்படுத்தியது மற்றும் ஏற்றுமதியை அதிகரித்தது.
- ✓ உள்ளூர் உற்பத்திக்கான அரசாங்கத்தின் உந்துததல், ஸ்மார்ட் போன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான முக்கிய மையமாக இந்தியாவை மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

➢ **2047-க்குள் அதிக வருமானம் பெறும் நிலையை நோக்கி இந்தியாவின் பாதை உள்ளது**




- ✓ நாஸ்கோம் உடன் இணைந்து பிரெய்ன் மற்றும் கம்பெனி வெளியிட்ட சமீபத்திய அறிக்கையின்படி. 2047ஆம் ஆண்டில் இந்தியா அதிக வருமானம் கொண்ட நாடாக மாறும் நிலையில் உள்ளது. அதன் ஜிடிபி 23 டிரில்லியன் டாலர் முதல் 35 டிரில்லியன் டாலர் வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ✓ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 விழுக்காடு பங்களித்து சேவைத்துறை மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் உற்பத்தித் துறை 32 விழுக்காடு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நியமனங்கள்

➢ **இந்தியாவின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையர்**

✓ பிப்ரவரி 17, 2025 அன்று, இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், சட்ட அமைச்சகத்தால் அடுத்த தலைமை தேர்தல் ஆணையராக அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டார்.




✓ இந்த நியமனம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. ஏனெனில் தேர்தல் ஆணையம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதை நிர்வகிக்கும் புதிய சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட முதல் தலைமைத் தேர்தல் ஆணையர் இவர் ஆவார்.

✓ அவரது பதவிக்காலம் ஜனவரி 26, 2029 வரை நீடிக்கும். வரவிருக்கும் மக்களவைத் தேர்தல் உட்டபட முக்கியமான தேர்தல் நிகழ்வுகளின்போது இந்தியத் தேர்தல் ஆணையம் அவரது தலைமையின்கீழ் இயங்கும்.

➢ **டெல்லி முதலமைச்சராக ரேகா குப்தா பதவியேற்றார்**

✓ புதுதில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் டெல்லியின் புதிய முதலமைச்சராக திருமதி ரேகா குப்தா பதவியேற்றுக் கொண்டார்.




✓ டெல்லி சட்டமன்றத் தேர்தலில் ஷாலிமார் பாக் தொகுதியில் ரேகா குப்தா வெற்றி பெற்றார்.

✓ 1992இல் டெல்லி பல்கலைக் கழகத்தின் தௌலத் ராம் கல்லூரியில் ஏபிவிபியில் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

✓ அவர் டெல்லி பல்கலைக் கழக மாணவர் சங்கத்தின் தலைவரானார்.

✓ சுஷ்மா ஸ்வராஜ், ஷீலா தீட்சித் அதிஷி ஆகியோருக்குப் பிறகு டெல்லியின் நான்காவது பெண் முதல்வராக ரேகா ஆனார்.

# விருதுகள்

➢ **பிபிசி ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை**

✓ இந்திய துப்பாக்கி சுடுதல் வீராங்கனை மனு பாக்கர் 2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் பதக்கங்களை வென்ற பிறகு, பிபிசி ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டார். அங்கு அவர் இரண்டு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றிருந்தார்..




✓ 22 வயதான அவரது நட்சத்திர தரத்திலான நிகழ்ச்சிகள் நாட்டின் உயரடுக்கு விளையாட்டு திறமைகளில் ஒருவராக அவரை நிலைநிறுத்தின.

✓ ஒரே ஒலிம்பிக்கில் பல பதக்கங்களை வென்ற முதல் இந்திய துப்பாக்கி சுடுதல் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார்.

✓ ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

# புகழ்பெற்ற ஆளுமைகள்

- **உலகின் முதல் கருப்பின திருமதி உலக அழகி**
  - ✓ லாஸ் வேகாஸில் நடந்த மாபெரும் இறுதிப் போட்டியில் திருமதி உலக அழகி 2025 பட்டத்தை வென்ற முதல் கறுப்பினப் பெண்மணி என்ற பெருமையை சோவீட்டோவில் பிறந்த ஷெகோகேலீ (TshegoGaelae) படைத்துள்ளார்.




  - ✓ 34 வயதான வழக்கறிஞரும் 2024 திருமதி தென்னாப்பிரிக்க ராணி பட்டத்தை வென்றவருமான இவர், தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தப் பட்டத்தை வென்ற ஒரே நபரான ஆபிரகாம்ஸின் அடிச் சுவடுகளைப் பின்பற்றுகிறார்.
  - ✓ கேலீயின் வெற்றியானது, இந்தப் போட்டியின் 40 ஆண்டு கால வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். மேலும், தென்னாப்பிரிக்காவை உலக அரங்கில் பிரதிநிதித்துவப்படுத்தும்போது பெண்களின் அதிகாரத்தை வென்றெடுக்க இந்தத் தளத்தைப் பயன்படுத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

- **பூர்ணிமா தேவி பர்மன்**
  - ✓ இந்திய உயிரியலாளரும் வனவிலங்கு பாதுகாப்பாளருமான பூர்ணிமா தேவி பர்மன், டைம் இதழின் 'ஆண்டின் சிறந்த பெண்' என்று தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




  - ✓ பூர்ணிமா தேவி பர்மன் இந்த ஆண்டு பட்டியலில் உள்ள ஒரே இந்தியப் பெண்மணி ஆவார்.

- ✓ பூர்ணிமா தேவி, உள்ளூரில் ஹர்கிலா என்று அழைக்கப்படும் அழிந்து வரும் பெரிய துணை நாரையைப் பாதுகாப்பதில் தனது அசைக்க முடியாத முயற்சிகளுக்காக பிரபலமானவர்.
- ✓ இது உலகின் அரிதான நாரைகளில் ஒன்றாகும்.
- ✓ டாக்டர் பர்மனின் அர்ப்பணிப்பு காரணமாக, அசாமில் அந்த நாரைகளின் எண்ணிக்கை 1800 ஆக அதிகரித்துள்ளது.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **நமீதா கோகலேயின் செவ்வாய் கிரகத்தில் வாழ்க்கை**
- ✓ நமீதா கோகலேயின் சமீபத்திய புத்தகம், 'செவ்வாய் கிரகத்தில் வாழ்க்கை: சேகரிக்கப்பட்ட கதைகள்', காதல், விதி மற்றும் மனித இருப்பு ஆகியவற்றை ஆராயும் 15 சிறுகதைகளை ஒன்றிணைக்கிறது.




- ✓ ஜனவரி 2025இல் வெளியிடப்பட்ட இந்தத் தொகுப்பு, கதை சொல்லலில் ஆசிரியரின் ஆழ்ந்த ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது.
- ✓ இந்தப் புத்தகம் இரண்டு தனித்தனி பிரிவுகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது – 'காதல் மற்றும் பிற குறைபாடுகள்' மற்றும் 'மகாபாரதத்தின் கண்ணாடி' – ஒவ்வொன்றும் உறவுகள், புராணங்கள் மற்றும் மனித உணர்ச்சிகள் பற்றிய வெவ்வேறு காட்சியை வழங்குகிறது.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

➢ **சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் புதிய நடைசாதனையை படைத்துள்ளார்**

✓ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ், முன்னாள் விண்வெளி வீராங்கனை பெக்கி விசனின் முந்தையை சாதனையை முறியடித்து, அதிக நேரம் விண்வெளியில் நடந்து சென்ற பெண் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார்.




✓ வில்லியம்ஸ் இப்போது ஒன்பது விண்வெளி நடைப் பயணங்களில் மொத்தம் 62 மணி நேரம் 6 நிமிட விண்வெளி நடைப் பயண நேரத்தைப் பதிவு செய்துள்ளார்.

✓ சர்வதேச விண்வெளி நிலையத்தில் சக விண்வெளி வீரர் புட்ச் வில்மோருடன் இணைந்து அவர் சமீபத்திய எக்ஸ்ட்ரா வெஹிகுலர் செயல்பாட்டின்போது (extravehicular activity) இந்த சாதனையை நிகழ்த்தினார்.

➢ **சமுத்ராயன் மிஷன்**

✓ பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் சமுத்திரயானில் கடலின் ஆழத்தை ஆராய விஞ்ஞானிகளை அனுப்பும் இந்தியாவின் இலட்சிய பணிக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்ததைத் தொடர்ந்து இந்த ஆழ்கடல் பணிக்கு ஊக்கம் கிடைத்துள்ளது.




✓ இந்தப் பணியானது ஆழமான கடல் தளங்களை வரைபடமாக்குவது மற்றும் 6000 மீ நீர்-ஆழ மதிப்பீட்டில் மனிதர்களைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்போன்ற தொழில்நுட்பங்களை உருவாக்குவது ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

✓ ஆழ்கடல் உயிர் வளங்களின் நிலையான பயன்பாட்டிற்காக ஆழ்கடல் சுரங்கத்தை ஆராய்வது மற்றும் கடலோர வெப்ப ஆற்றலால் இயக்கப்படும் உப்புநீக்கும் ஆலைகளுக்கான பொறியியல் வடிவமைப்புகளை உருவாக்குவதும் இதில் அடங்கும்.

- **கவாச்: பாதுகாப்பான இரயில் பயணத்திற்கு இந்தியாவின் உறுதி மொழி**
- ✓ கவாச் தானியங்கி இரயில் பாதுகாப்பு (Automatic Train Protection) அமைப்பு நாடு தழுவிய அளவில் வெளியிடப்பட்டதன்மூலம் இந்தியாவின் இரயில்வே பாதுகாப்பு ஒரு பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது.




- ✓ இந்த இலட்சிய திட்டம் அடுத்த ஆறு ஆண்டுகளில் முழு இரயில்வே நெட்வொர்க்கையும் உள்ளடக்கும் என்று மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் உறுதிப்படுத்தினார்.
- ✓ நோக்கம் தெளிவாக உள்ளது – பாதுகாப்பான, திறமையான இரயில் செயல்பாடுகளை உறுதி செய்வது. அதே நேரத்தில் உலகின் மிகப்பெரிய இரயில்வே அமைப்புகளில் ஒன்றின்மீது பயணிகளின் நம்பிக்கையும் அதிகரிக்கும்.

- **ஓலெக் கொனோனென்கோ (Oleg Kononenko) விண்வெளியில் அதிக நேரம் இருந்து உலக சாதனை படைத்துள்ளார்**
- ✓ ரஷ்ய விண்வெளி வீரர் ஓலெக் கொனோனென்கோ, விண்வெளியில் அதிக நேரம் இருந்து உலக சாதனையைப் படைத்ததன்மூலம் ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளார்.



- ✓ 0830 ஜிஎம்டி நேரப்படி, ஒலேக் கொனோனென்கோ இந்த அதிகாரப்பூர்வ சாதனையை நிகழ்த்தினார். இது விண்வெளி ஆய்வு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைக் குறிக்கிறது.
- ✓ விண்வெளியில் மொத்தம் 878 நாட்கள், 11 மணி நேரம், 29 நிமிடங்கள் மற்றும் 48 வினாடிகள் இருந்து சாதனையை நிகழ்த்திய ஜெனடி படல்காவின் முந்தைய சாதனையை 59 வயதான இந்த விண்வெளி வீரர் முறியடித்துள்ளார்.

➢ **இந்தியாவின் பெண் ரோபோ விண்வெளி வீராங்கனை 'வியோமித்ரா' (Vyommitra)**

✓ இந்திய விண்வெளி முயற்சிகளுக்கான முன்னோடி பாய்ச்சலில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பெண் ரோபோ விண்வெளி வீராங்கனையான வியோமித்ரா, இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் குழுவாக இல்லாமல் தனியாக பணியைத் தொடங்க உள்ளது.




✓ 'வியோமா (விண்வெளி)' மற்றும் 'மித்ரா (நண்பர்)' என்ற சமஸ்கிருத சொற்களால் பெயரிடப்பட்ட இந்தப் பணி, 2025 ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்ட நாட்டின் முதல் மனிதர்களை ஏற்றிச் செல்லும் இலட்சிய ககன்யான் பணியை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது.

✓ மேம்பட்ட திறன்களுடன் கூடிய வியோமித்ரா, தொகுதி அளவுருக்களைக் கண்காணிக்கவும், விழிப்பூட்டல்களை வழங்கவும் மற்றும் வாழ்க்கை ஆதரவு செயல்பாடுகளை செயல்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

➢ **இஸ்ரோ '.:.பீஸ்ட் (FEAST) 2025 என்ற மென்பொருளை வெளியிட்டது**

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அதன் கட்டமைப்புப் பகுப்பாய்வு மென்பொருளின் சமீபத்திய பதிப்பான .:.பீஸ்ட் (Finite Element Analysis of Structures - FEAST) 2025ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.




✓ .:.பீஸ்ட் என்பது இஸ்ரோவின் விக்ரம். சாராபாய் விண்வெளி மையத்தால் உருவாக்கப்பட்ட, உள்நாட்டில் வரையறுக்கப்பட்ட உறுப்பு பகுப்பாய்வு (finite element analysis) மென்பொருள் ஆகும்.

✓ மன அழுத்தம், திரிபு மற்றும் வெப்பநிலை மாறுபாடுகள் போன்ற நிஜ உலக சக்திகளுக்கு கட்டமைப்புகள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைக் கணிக்க இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ✓ ஃபீஸ்ட் உடன், இஸ்ரோ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, தனிப்பயனாக்கக்கூடிய மற்றும் செலவு குறைந்த தீர்வை வழங்குகிறது. இது குறிப்பாக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறைகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

➢ **CE20 கிரையோஜெனிக் இக்னிஷனை இஸ்ரோ வெற்றிகரமாக சோதித்தது**

- ✓ பிப்ரவரி 7, 2025 அன்று, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் CE20 கிரையோஜெனிக் இயந்திரத்தின் பற்றவைப்பு சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.




- ✓ இந்த எஞ்சினானது செலுத்து வாகனம் மார்க்-3 (Launch Vehicle Mark-3) இன் மேல்நிலையை இயக்குகிறது.
- ✓ தமிழகத்தின் மகேந்திரகிரியில் உள்ள உயர் உயர சோதனை மையத்தில் இந்த சோதனை நடந்தது.
- ✓ ககன்யான் பணிக்கு CE20 இஞ்சின் அவசியம் ஆகும்.
- ✓ இது வெற்றிட நிலைமைகளின்கீழ் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 19 டன்கள் முதல் 22 டன்கள் வரை உந்துதல் நிலைகளை உருவாக்க முடியும்.
- ✓ இயந்திரத்தின் வெற்றிகரமான பற்ற வைப்பு இந்தியாவின் விண்வெளி ஆய்வு முயற்சிகளில் ஒரு முக்கியமான மைல்கல் ஆகும்.

➢ **விண்வெளிக்கான உள்நாட்டு சிப் (Indigenous Chip for Space)**

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸ் ஆகியவை இணைந்து ‘ஐரிஸ்’ (IRIS) அதாவது. விண்வெளி பயன்பாடுகளுக்கான உள்நாட்டு ரிஸக்-5 நுண்செயலி (Indigenous RISC-V Microprocessor for Space Applications) என்ற உள்நாட்டு குறைக்கடத்தி சிப்பை உருவாக்கி வெற்றிகரமாக துவக்கியுள்ளன.




- ✓ முக்கியமான துறைகளில் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் நோக்கில், இந்த வளர்ச்சியானது, 'ஆத்மநிர்பர் பாரத்' முன்முயற்சியுடன் ஒத்துப்போகிறது.
- ✓ இந்த 'ஐரிஸ்' சிப் ஆனது, 'சக்தி' என்ற நுண்செயலி திட்டத்திலிருந்து பெறப்பட்டது. இது திறந்த மூல ரிஸ்க்-5 அறிவுறுத்தல் தொகுப்பு கட்டமைப்பை (open-source RISC-V Instruction Set Architecture) அடிப்படையாகக் கொண்டது.

➢ **எலோன் மஸ்க் Grok 3 செயற்கை நுண்ணறிவு: பூமியின் புத்திசாலித்தனமான செயற்கை நுண்ணறிவை வெளியிட்டார்**

- ✓ எலோன் மஸ்க் மற்றும் அவரது செயற்கை நுண்ணறிவு நிறுவனமான **xAI** இணைந்து **Grok 3** ஐ அறிமுகப்படுத்தியுள்ளன. இது ஒரு மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு சாட்போட் ஆகும். இது இதுவரை உருவாக்கப்பட்டதிலேயே மிகவும் அறிவார்ந்த செயற்கை நுண்ணறிவி ஆகும்.




- ✓ ஏறக்குறைய 100,000 பார்வையாளர்களை ஈர்த்த இந்த வெளியீட்டு நிகழ்வு, க்ரோக் 3இன் குறிப்பிடத்தக்க திறன்கள், அதன் வளர்ச்சி செயல்முறை மற்றும் முன்னணி செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை எவ்வாறு விஞ்சுகிறது என்பதை வெளிப்படுத்தியது.

➢ **ஒன்றிய அரசு செயற்கை நுண்ணறிவு திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது**

- ✓ ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டு தொழில்முனைவோர் அமைச்சகம், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (National Skill Development Corporation) மற்றும் இன்டெல் இந்தியா ஆகியவை 'தொழில்முனைவுக்கான செயற்கை நுண்ணறிவு' நுண் கற்றல் தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளன.





- ✓ இந்த முயற்சியானது, செயற்கை நுண்ணறிவு கருத்துக்களை எளிமைப்படுத்தவும், இந்தியா முழுவதும் உள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களிடையே தொழில் முனைவோர் சிந்தனையை ஊக்குவிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ 2025ஆம் ஆண்டுக்குள் 1 இலட்சம் இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த, பொருளாதாரத்தில் முன்னேறத் தேவையான திறன்களை வழங்குவதன்மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ 'தொழில்முனைவோருக்காக செயற்கை நுண்ணறிவு' (AI for Entrepreneurship) மாட்யூல் புதுமைகளை வளர்ப்பதற்கும், கற்றலில் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் இந்தியாவின் பரந்த பார்வையின் ஒரு பகுதியாகும்.

- ➢ **உலகின் மிகப்பெரிய செங்குத்து உந்துசக்தி கலவையை (Vertical Propellant Mixer) இஸ்ரோ உருவாக்குகிறது**
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், திட உந்துசக்தி உற்பத்திக்காக உலக அளவில் மிகப்பெரிய 10 டன் செங்குத்து கிரக கலவையை உருவாக்குவதன்மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.




- ✓ பெங்களூருவில் உள்ள மத்திய உற்பத்தி தொழில்நுட்ப நிறுவனத்துடன் (Central Manufacturing Technology Institute) இணைந்து உருவாக்கப்பட்ட இந்த உள்நாட்டுக் கலவையானது, இந்தியாவின் விண்வெளித் திறன்களில் கணிசமான முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், திடமான ராக்கெட் மோட்டார் உற்பத்தியின் செயல்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- ➢ **புதிய வௌவால் கொரோனா வைரஸ் HKU5-CoV-2 சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**
- ✓ மனித உயிரணுக்களை பாதிக்கும் திறன் கொண்ட HKU5-CoV-2 என்ற புதிய வௌவால் கொரோன வைரஸை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.




- ✓ இந்த வைரஸ் ACE2 ஏற்பியைப் பயன்படுத்துகிறது. இது SARS-CoV-2, கோவிட்-19க்குக் காரணமான வைரஸ், மனித உயிரணுக்களுக்குள் நழையப் பயன்படுத்திய அதே வழிமுறையைப் பின்பற்றுகிறது.
- ✓ இந்தக் கண்டபிடிப்பு சாத்தியமான ஜீனோமிக் டிரான்மிஷன் பற்றிய கவலைகளை எழுப்பியுள்ளது. வௌவால்மூலம் பரவும் வைரஸ்களைத் தொடர்ச்சியான கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

➢ **கடலோரப் பேரிடர்களுக்கு எதிரான உயிர்-கவசமாக சதுப்பு நிலங்கள்**

- ✓ கடலோர சதுப்பு நிலங்கள் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிராக உயிர்-கவசமாக செயல்படுகின்றன.



- ✓ இந்தியாவின் கடற்கரையோரத்தில் சுனாமி மற்றும் வெள்ளம் ஆகியவற்றின் தாக்கங்களைக் குறைப்பதில் அவற்றின் செயல்திறனை சமீபத்திய ஆராய்ச்சி குறிக்கிறது.
- ✓ பாம்பே, இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த குழு நடத்திய ஆய்வில், வளர்ந்து வரும் தாவரங்கள், குறிப்பாக சதுப்பு நிலங்கள் எவ்வாறு பாதுகாப்புத் தடையாகச் செயல்படுகின்றன என்பதை மதிப்பிடுவதற்கு மேம்பட்ட உருவகப்படுத்துதல்கள் பயன்படுத்தப்பட்டன.
- ✓ கடலோர பாதுகாப்பு உத்திகளில் இயற்கை தீர்வுகளை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை இந்த ஆராய்ச்சி வலியுறுத்துகிறது.

➢ **நிலவின் தென் துருவம்: முதல் விரிவான புவியியல் வரைபடம் வெளியிடப்பட்டது**

- ✓ சந்திரயான்-3 திட்டத்தின் தரவுகளைப் பயன்படுத்தி, நிலவின் தென் துருவத்தின் முதல் விரிவான புவியியல் வரைபடத்தை உருவாக்கியதன்மூலம் இந்திய விஞ்ஞானிகள் ஒரு வரலாற்று முன்னேற்றத்தை அடைந்துள்ளனர்.



- ✓ இந்த புதிய வரைபடம் நிலவின் மேற்பரப்பில் முக்கியமான நுண்ணறிவுகளை வழங்குகிறது. இது பிராந்தியத்தின் நிலப்பரப்பு, பள்ளம் வடிவங்கள் மற்றும் புவியியல் வரலாறு பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வழங்குகிறது.
- ✓ இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (அகமதாபாத்), பஞ்சாப் பல்கலைக் கழகம் (சண்டிகார்) மற்றும் இஸ்ரோவின் மின்-ஒளியியல் அமைப்புகளுக்கான ஆய்வகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியானது, சந்திரனின் பரிணாமத்தைப் புரிந்து கொள்வதில் ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது.

➢ **பசுமை மாற்றக் கூட்டணி இந்தியா (Green Transition Alliance India - GTAI)**

- ✓ டென்மார்க், பசுமை மாற்றக் கூட்டணி இந்தியா முயற்சியை அறிவித்தது.




- ✓ நிலையான ஆற்றல் தீர்வுகளில் இந்தியாவுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக டென்மார்க்கால் பசுமை மாற்றக் கூட்டணி இந்தியா முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ உலகளாவிய கார்பன் நடுநிலைமையை அடைவதற்கான உறுதிப்பாட்டிற்கு இது உதவும்.
- ✓ இரு நாடுகளின் வணிகங்கள், அரசு அமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நிதி பங்குதாரர்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குதன்மூலம், இந்தியாவில் நிலையான அற்றல் வளர்ச்சியை வளர்ப்பதில் இந்த புதிய கூட்டணி முக்கிய பங்கு வகிக்கும்.

# விளையாட்டுகள்

- **டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் 2025**

✓ செஸ் போட்டியில், இந்திய கிராண்ட்மாஸ்டர் ஆர். பிரக்ஞானந்தா, நெதர்லாந்தின் விஜ்கான் ஜீயில் நடைபெற்ற டைபிரேக்கரில் நடப்பு உலக சாம்பியனான டி. குகேஷைத் தோற்கடித்து. பரபரப்பான மோதலில் மதிப்பு மிக்க டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் 2025 பட்டத்தை வென்றார்.




✓ இந்த வெற்றி 2006இல் விஸ்வநாதன் ஆனந்த்துக்குப் பிறகு மதிப்புமிக்க இந்தப் பட்டத்தை வென்ற முதல் இந்தியராக ஆர். பிரக்ஞானந்தாவை ஆக்கியுள்ளது.

✓ 14 வீரர்களைக் கொண்ட ரவுண்ட்-ராபின் நிகழ்வு வியத்தகு முறையில் முடிவடைந்தது. குகேஷ மற்றும் பிராக் இருவரும் 13 சுற்றுகளுக்குப் பிறகு 8.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர்.

- **19 வயதுக்குக் குறைவான பெண்களுக்கான டி 20 உலகக் கோப்பை பட்டம்**

✓ மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள பேயுமாஸ் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், தென்னாப்பிரிக்காவை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி ஐசிசி 19 வயதுக்குக் குறைவான மகளிர் டி20 உலகக் கோப்பைப் பட்டத்தை இந்தியா தக்க வைத்துள்ளது.





✓ கோங்காடி த்ரிஷாவின் ஆட்டமிழக்காத 44 ரன்கள், நிக்கி பிரசாத் தலைமையிலான மகளிர் அணி 12வது ஓவரில் 83 ரன்கள் இலக்கை பின்பற்ற உதவியது.

✓ அவர் ஆட்ட நாயகி விருதையும் பெற்றார். முன்னதாக தென் ஆப்பிரிக்கா 82 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

- **38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025**

- ✓ 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025 உத்தரகாண்டில் முடிவடைந்தன.



- ✓ இந்தியாவில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள், உத்தரகாண்டில் பல்வேறு இடங்களில் நடைபெற்று பிப்ரவரி 14 அன்று நிறைவடைந்தன.
- ✓ சர்வீசஸ் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியம் 68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.
- ✓ மகாராஷ்டிரா 54 தங்கம், 71 வெள்ளி, 76 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- ✓ ஹரியானா 48 தங்கம், 47 வெள்ளி, 58 வெண்கலப் பதக்கங்களை வென்று மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- ✓ 2026இல் 39வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பெருமையை மேகாலயா பெற்றுள்ளது.

APOLLO STUDY CENTRE

# அறிக்கைகள்

➢ **பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு அட்டவணை (Panchayat Devolution Index) 2024**

✓ 'மாநிலங்களில் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரப் பகிர்வின் நிலை (2024) – ஒரு சுட்டிக் காட்டும் சான்று அடிப்படையிலான தரவரிசை' – என்ற அறிக்கை ஒன்றிய அரசின்பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சரால் தொடங்கப்பட்டது.




✓ பஞ்சாயத்து பகிர்வு குறியீட்டின்கீழ் அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

✓ முதல் இடத்தை கர்நாடகா (72.23) மற்றும் இரண்டாவது இடத்தை கேரளா (70.59) பெற்றுள்ள நிலையில், 68.38 மதிப்பெண்களைப் பெற்று தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றது.

✓ 'செயல்பாடுகளின்' பரிமாணத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு தேசிய அளவில் 60.24 மதிப்பெண்களுடன் அதிக மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

✓ தமிழகத்தில் 12,525 கிராம பஞ்சாயத்துகள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 38 மாவட்ட பஞ்சாயத்துகள் உள்ளன.

➢ **இந்தியாவின் தீவிர வானிலை நெருக்கடி: அதிகரித்து வரும் இறப்புகள் மற்றும் பொருளாதார இழப்புகள்**

✓ மனித வாழ்க்கை மற்றும் பொருளாதாரத்திற்குப் பேரழிவைத் தரும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய தீவிர வானிலை நிகழ்வுகளில் இந்தியா அதிகபட்ச உயர்வைக் கண்டு வருகிறது.



- ✓ ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, தீவிர வானிலை காரணமாக உலகளாவிய இறப்புகளில் 10 விழுக்காடு இறப்புகளை நாடு எதிர்கொண்டு வருகிறது. இது மோசமான பாதிப்புக்குள்ளான நாடுகளில் ஒன்று என்பதைக் குறிக்கிறது.
- ✓ 1993 முதல் 2022 வரை, இந்தியாவில் 400க்கும் மேற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. இதனால் கிட்டத்தட்ட, 80,000 இறப்புகள் மற்றும் 180 பில்லியன் ரூபாய் மதிப்பிலான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- ✓ இந்தப் பேரழிவுகள் அடிக்கடி நடைபெற்று, நாட்டின் தயார்நிலை மற்றும் எதிர்விளைவைப் பற்றிய தீவிர கவலைகளை எழுப்புகின்றன.

➢ **சர்வதேச எரிசக்தி நிறுவனம் மின்சாரம் 2025 அிற்ககையை வெளியிட்டது**

- ✓ உலகளாவிய எரிசக்தி தேவை 2024 இல் 43 விழுக்காடு உயர்ந்தது. 2027வரை 4 விழுக்காடு வரை தொடர்ந்து அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




- ✓ அமெரிக்கா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தைப் பின்னுக்குத் தள்ளி சீனா அதிக மின் நுகர்வோராக உருவெடுத்துள்ளது.
- ✓ இந்தியா – 2024இல் மின்சாரத் தேவை 5.8 விழுக்காடு அதிகரித்தது. மேலும், 2025-2027இலிருந்து ஆண்டு தோறும் சராசரியாக 6.3 விழுக்காடு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தியாவின் அனல் மின் திறன் 2032 ஆம் ஆண்டுக்குள் 283 ஜிகா வாட் ஆக உயரும்.
- ✓ 2024ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்சார உற்பத்தி கலவையாக இருக்கும். இதில் நிலக்கரி அதிக அளவு பங்களிப்பதாக இருக்கும்.
- ✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்களிப்பு 21 விழுக்காடு (2024)லிருந்து 27 விழுக்காடாக (2027) அதிகரிக்கும். இதனால் சூரிய ஒளி மின்னழுத்த விரிவாக்கத்திற்கு வழிவகுக்கிறது.
- ✓ 2024இல் அணுசக்தி 13 விழுக்காடு உயர்ந்தது. 2031-32இல் 8.2 ஜிகா வாட்டிலிருந்து 22.5 ஜிகா வாட்டாக மூன்று மடங்கு அதிகரிக்கும்.

# தரவரிசைப்பட்டியல்

➢ **LEED பசுமை கட்டிட சான்றிதழில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.**

✓ USGBC இன் 2024 LEED சான்றிதழ் தரவரிசையில் 370 திட்டங்கள் 8.50 மில்லியன் ஜிஎஸ்எம்-ஐ உள்ளடக்கியதன்மூலம், இந்தியா தனது மூன்றாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.




✓ சீனா 25 மில்லியன் ஜிஎஸ்எம் சான்றிதழுடன் தரவரிசையில் முன்னணியில் உள்ளது. கனடா 10 மில்லியன் ஜிஎஸ்எம் உடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

✓ இந்தியாவில் LEED சான்றிதழ்கள் GBCI ஆல் நிர்வகிக்கப்படுகின்றன. இது நிலையான மற்றும் நெகிழ்ச்சியான கட்டிடங்களை ஏற்றுக் கொள்கிறது.

➢ **ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் (Corruption Perceptions Index) இந்தியாவின் தரவரிசை 2024**

✓ ஊழல் என்பது உலக அளவில் குறிப்பிடத்தக்க ஒரு சவாலாக உள்ளது. இது நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் வளர்ச்சியைப் பாதிக்கிறது.




✓ டிரான்ஸ்பரன்சி இண்டர்நேஷனல் வெளியிட்ட ஊழல் புலனாய்வுக் குறியீடு 2024இன்படி, இந்தியா 180 நாடுகளில் 96வது இடத்தில் உள்ளது. இந்தியாவின் மதிப்பெண்கள் 38 ஆக உள்ளது. இது 2023இல் 39 ஆகவும் 2022இல் 40 ஆகவும் இருந்தது.

✓ ஊழல் புலனாய்வுக் குறியிடு என்பது 0 (அதிக ஊழல்) முதல் 100 (மிகவும் தூய்மையானது) வரையிலான அளவைப் பயன்படுத்தி, பொதுத்துறை ஊழலின் உணரப்பட்ட நிலைகளின் அடிப்படையில் நாடுகளை மதிப்பிடுகிறது.

➢ **பஞ்சாயத்து பகிர்வு குறியீட்டில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது**

✓ பஞ்சாயத்து பகிர்வு குறியீட்டின்கீழ், அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.




✓ ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வின்படி, கர்நாடகா (72.23), கேரளா (70.59) ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக 68.38 மதிப்பெண்களை தமிழ்நாடு பெற்றுள்ளது.

✓ ஒட்டுமொத்த பஞ்சாயத்து குறியீட்டுப் பகிர்வைத் தவிர, 'செயல்பாடுகளின்' பரிமாணத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு தேசிய அளவில் 60.24 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது. இது 28 மாநிலங்கள் மற்றும் ஏழு யூனியன் பிரதேசங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக ஆய்வு செய்யப்பட்ட ஆறு பரிமாணங்களில் ஒன்று ஆகும்.

➢ **உலக பொருளாதார தரவரிசையில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது**

✓ உலகின் தலைசிறந்த பொருளாதார நாடுகளில் இந்தியா 5 வது இடத்தில் இருப்பதாகவும், அதன் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2025ஆம் அண்டக்குள் 4.3 டிரில்லியன் டாலராக இருக்கும் என்றும் நிதி ஆயோக் தெரிவித்துள்ளது.




✓ சர்வதேச நாணய நிதியத்தை மேற்கோள் காட்டி நிதி ஆயோக், இந்தியாவின் உண்மையான ஜிடிபி குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சிப் பாதையில் உள்ளது என்று தெரிவித்துள்ளது. இது 2015இல் 2.4 டிரில்லியனாக இருந்தது, 2025இல் 4.3 டிரில்லியனாக உயரும்.

✓ சீனா மற்றும் அமெரிக்கா போன்ற முக்கிய பொருளாதாரங்களை விஞ்சி, முதல் 20 நாடுகளில் 77 விழுக்காடு என்ற மிக உயர்ந்த பணவீக்க-சரிசெய் வளர்ச்சியை இந்தியா பதிவு செய்துள்ளது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| பிப்ரவரி 01 | இந்திய கடலோர காவல்படை தினம் | இந்திய கடலோர காவல் படை தினம் 2025இன் மையக் கருத்து, 'இந்திய கடலோர காவல்படை: புதுமைப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் வீரத்துடன் சேவை செய்தல்' என்பதாகும். |
| பிப்ரவரி 02 | உலக சதுப்பு நில தினம் | 2025ஆம் ஆண்டு உலக சதுப்பு நிலத்தின் கருப்பொருள், 'எங்கள் பொதுவான எதிர்காலத்திற்காக சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பது' என்பதாகும். |
| பிப்ரவரி 04 | உலக புற்றுநோய் தினம் | 2025-2027 உலக புற்றுநோய் தினத்திற்கான கருப்பொருள் 'தனித்துவத்தால் ஒன்றுபட்டது' என்பதாகும். |
| பிப்ரவரி 04 | மனித சகோதரத்துவத்திற்கான சர்வதேச தினம் | மையக்கருதது 2025 – உலக அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வதற்கான மனித சகோதரத்துவம் |
| பிப்ரவரி 07 | தேசிய கருப்பு எச்ஐவி / எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் | 'ஈடுபடு, கற்பி, அதிகாரமளி: கருப்பு சமூகங்களிடையே எச்ஐவி/எய்ட்ஸ்-ஐ ஒழிக்க ஒன்றுபடுவோம்' |
| பிப்ரவரி 10 | சர்வதேச கால்-கை வலிப்பு தினம் | மையக்கருத்து- 'எனது கால் கை வலிப்பு பயணம்' |
| பிப்ரவரி 10 | உலக பருப்பு தினம் | 2025ஆம் ஆண்டு உலக பருப்பு தினத்திற்கான கருப்பொருள், 'பருப்பு வகைகள்: வேளாண் உணவு முறைகளுக்கு பன்முகத் தன்மையைக் கொண்டு வருதல்' என்பதாகும். |
| பிப்ரவரி 10 | தேசிய குடற்புழு நீக்க தினம் | தேசிய குடற்புழு நீக்க நாள் 2025இன் அதிகாரப்பூர்வ மையக் கருத்து, STH-ஐ ஒழிப்போம்: குழந்தைகளுக்கான ஆரோக்கியமான எதிர்காலத்தில் முதலீடு செய்வோம்' |
| பிப்ரவரி 11 | அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகள் சர்வதேச தினம் | 2025ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், 'ஸ்டெம் வேலைகளை அவிழ்த்தல்: அறிவியலில் அவளது குரல்' |
| பிப்ரவரி 11 | உலக யுனானி தினம் | மையக் கருத்து: ஒரு பூமி, ஒரு ஆரோக்கியத்திற்கான யுனானி மருத்துவம் |
| பிப்ரவரி 12 | தேசிய உற்பத்தித் திறன் தினம் | மையக்கருத்து: யோசனைகள் முதல் தாக்கம் வரை: போட்டித்தொடக்கங்களுக்கான அறிவுசார் |

| | | |
|---|---|---|
| | | சொத்துரிமையைப் பாதுகாத்தல். |
| பிப்ரவரி 13 | உலக வானொலி தினம் | இந்த ஆண்டு உலக வானொலி தினத்தின் கருப்பொருள் - வானொலி மற்றும் காலநிலை மாற்றம். |
| பிப்ரவரி 13 | தேசிய மகளிர் தினம் | ‘இந்தியாவின் நைட்டிங்கேல்’ சரோஜினி நாயுடுவின் பாரம்பரியத்தைக் கொண்டாடுகிறோம். |
| பிப்ரவரி 15 | உலக நீர்யானை தினம் | 2025ஆம் ஆண்டு உலக நீர்யானை தினத்தின் கருப்பொருள், ‘இயற்கையின் நதி ராட்சதர்களுக்கு ஒரு அஞ்சலி’ என்பதாகும். |
| பிப்ரவரி 17 | உலக பாங்கோலின் தினம் | 2025ஆம் ஆண்டு உலக பாங்கோலின் தினத்தின் கருப்பொருள், ‘பாங்கோலின் பாதுகாப்பிற்கான இளைஞர் மரபு’ என்பதாகும். |
| பிப்ரவரி 18 | உலக திமிங்கில தினம் | 2025ஆம் ஆண்டு உலக திமிங்கில தினத்தின் கருப்பொருள், ‘பூமியின் கம்பீரமான ராட்சதர்களான நமது திமிங்கிலங்களைக் கொண்டாடுவோம் மற்றும் பாதுகாப்போம்’ என்பதாகும். |
| பிப்ரவரி 20 | உலக சமூக நீதி தினம் | மையக் கருத்து, ‘இடைவெளிகளைக் குறைத்தல், கூட்டணிகளை உருவாக்குதல்’ உலகளாவிய சவால்களைச் சமாளிப்பதில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. |
| பிப்ரவரி 21 | சர்வதேச தாய்மொழி தினம் | மையக் கருத்து, ‘சர்வதேச தாய்மொழி தினத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம்’ |
| பிப்ரவரி 22 | உலக சாரணர் தினம் | 2025ஆம் அண்டு உலக சாரணர் தினத்தின் கருப்பொருள், ‘எங்கள் கதை’. |
| பிப்ரவரி 24-28 | நிதி கல்வியறிவு வாரம் | இந்த ஆண்டின் கருப்பொருள் பெண்களை நிதி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்துவதை வலியுறுத்துகிறது. |
| பிப்ரவரி 27 | உலக என்ஜிஓ தினம் | ‘நிலையான எதிர்காலத்திற்கான அடித்தட்டு இயக்கங்களை மேம்படுத்துதல்’ என்பது 2025க்கான கருப்பொருள் ஆகும். |
| பிப்ரவரி 27 | உலக புரத தினம் | மையக்கருத்து: - #RightWayToProtein. |
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் | 2025ஆம் ஆண்டின் தேசிய அறிவியல் |

| | | |
|---|---|---|
| | | தினத்தின் கருப்பொருள், 'விக்ஸித் பாரதத்துக்காக அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளில் உலகளாவிய தலைமைத்துவத்திற்காக இந்திய இளைஞர்களை மேம்படுத்துதல்' என்பதாகும். |

# CURRENT AFFAIRS - TNPSC ORIGINAL QUESTIONS & ANSWERS – EXAMS CONDUCTED IN 2025

## TNPSC GROUP IIA MAIN 2025

### CURRENT AFFAIRS

1. iTNT Hub is located at
   **a. Anna University**
   b. Madras University
   c. Vellore Institute of Technology
   d. Madurai University
   e. Answer not known
   iTNT ஹப் ______அமைந்துள்ளது
   a. அண்ணா பல்கலைக்கழகம்
   b. சென்னை பல்கலைக்கழகம்
   c. வேலூர் தொழில்நுட்பநிறுவனம்
   d. மதுரை பல்கலைக்கழகம்
   e. விடை தெரியவில்லை

2. Which of the following statements is true about World Tamil Diaspora Day?
   (i) The Chief Minister of Tamil Nadu declared January 12 as World Tamil Diaspora Day
   (ii) The Diaspora Tamils conference was successfully held, with the theme of 'we will win'
   (iii) Rs. 5 crore has been sanctioned for the establishment of Tamil ParapuraiKazhagam to teach Tamil to Tamils living in foreign countries.
   **a. (i) only**
   b. (i) and (iii) only
   c. (i) and (ii) only
   d. (ii) and (iii) only
   e. Answer not known
   உலகத் தமிழ் புலம்பெயர் நாள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எதுஉண்மை?
   (i) தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜனவரி 12-ஐ உலக புலம்பெயர் தமிழர் தினமாக அறிவித்தார்.
   (ii) 'நாம் வெல்வோம்'என்ற கருப்பொருளுடன் புலம்பெயர் தமிழர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.
   (iii) வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்கதமிழ்ப் பரப்புரைகழகம் அமைப்பதற்குரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
   a. (i) மட்டும்
   b. (i) மற்றும் (iii) மட்டும்
   c. (i) மற்றும் (ii) மட்டும்
   d. (ii) மற்றும் (iii) மட்டும்
   e. விடை தெரியவில்லை

3. Which of the following is correctly paired?
   (1) ManjushaKanwar - Badminton
   (2) Vineet Kumar Sharma - Chess
   (3) KavithaSelvaraj - Kabaddi
   (4) R. Vaishali - Hockey
   a. (2) and (4) are correct
   **b. (1) and (3) are correct**
   c. (3) and (4) are correct
   d. (1) and (2) are correct
   e. Answer not known
   கீழ்க்கொடுக்கப்பட்டவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
   (1) மஞ்சுஷாகன்வர் - இறகுப் பந்தாட்டம்
   (2) வினீத்குமார் ஷர்மா - சதுரங்கம்
   (3) கவிதாசெல்வராஜ் - கபடி
   (4) R. வைஷாலி - ஹாக்கி
   a. (2) மற்றும் (4) சரி
   b. (1) மற்றும் (3) சரி
   c. (3) மற்றும் (4) சரி
   d. (1) மற்றும் (2) சரி
   e. விடை தெரியவில்லை

4. Why was the My Scheme Platform introduced by the Government of India?
   a. To provide online shopping for government products
   **b. To allow users to discover eligible government schemes based on their demography**
   c. To give citizens free access to educational resources
   d. To help people apply for government jobs across the country
   e. Answer not known

   My Scheme இயங்குதளம் ஏன் இந்தியஅரசால் அறிமுகப்படுத்தப்பட்டது?
   a. அரசுதயாரிப்புகளுக்கு ஆன்லைன் ஷாப்பிங் வழங்குதல்
   b. பயனர்கள் தங்களின் மக்கள்தொகை அடிப்படையில் தகுதியான அரசு திட்டங்களை கண்டறிய அனுமதிப்பது
   c. குடிமக்களுக்கு கல்வி வளங்களை இலவசமாக வழங்குதல்
   d. நாடுமுழுவதும் உள்ள அரசாங்கவேலைகளுக்கு விண்ணப்பிக்கும் மக்களுக்கு உதவுதல்
   e. விடை தெரியவில்லை

5. People in Tamil Nadu Greets Chief Minister as "Thayumanavar" (Man who becomes Mother) for the introduction of the scheme
   a. Breakfast in schools b. VidiyalPayanaThittam
   c. Neengal Nalama d. Makaludan Mudalvar
   d. Answer not known

   தமிழ்நாட்டில், இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்காக, முதலமைச்சரை, மக்கள் "தாயுமானவர்" என்று அழைக்கின்றனர்
   a. பள்ளியில் காலை உணவு b. விடியல் பயணத் திட்டம்
   c. நீங்கல் நலமா d. மக்களுடன் முதல்வர்
   d. விடைதெரியவில்லை

   **This question and answer are to be placed before the expert committee for final decision**

6. "NeengalNalama" is the scheme inaugurated by the Government of Tamil Nadu.
   a. Intended to reduce the gap between the people and government
   b. It is made up of an instrument of e-governance
   c. It focuses on ensuring that government initiatives reach the intended beneficiaries
   **d. All of these**
   e. Answer not known

   தமிழ்நாடு அரசால் துவங்கப்பட்டுள்ள'நீங்கல் நலமா' என்னும் திட்டமானது
   a. மக்களுக்கும் - அரசாங்கத்திற்கும் இடையேயான இடைவெளியை குறைப்பதற்குமானதாகும்
   b. இத்திட்டமானது மின் ஆளுகைஎனும் கருவியால் உருவாக்கப்பட்டதாகும்
   c. இத்திட்டமானது அரசு பொது நலதிட்டங்கள் குறிப்பிட்டவர்களுக்கு சென்று சேர்கிறதா என்று உறுதிப்படுத்துகின்றது
   d. இவை அனைத்தும்
   e. விடைதெரியவில்லை

7. Which of the following is incorrectly paired?

| | | |
|---|---|---|
| (i) Atal Tinkering Lab | - | Nurtures an innovative mindset towards research amongst high school students |
| (ii) KrishiNeev | - | Platform to promote technology interventions in agriculture |
| (iii) Palna | - | Provides support service like safe accommodation and Medical assistance to working women |

(iv) Unnati - Technology platform integrated with artificial intelligence to match job providers with seekers

a. (i) only   b. (i) and (ii) only   **c. (iii) only**
d. (i) and (iv) only   e. Answer not known

பின்வருவனவற்றில் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளது?

(i)அடல் டிங்கரிங் ஆய்வகம் - உயர்நிலை பள்ளி மாணவர்களிடையே ஆராய்ச்சிக்கான புதுமையான மனநிலையை வளர்க்கிறது

(ii)கிரிஷிநீவ - விவசாயத்தில் தொழில் நுட்பத் தலையீடுகளை ஊக்குவிக்கும் தளம்

(iii)பல்னா - பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவி போன்ற ஆதரவுச் சேவைகளை வழங்குகிறது.

(iv)உன்னதி - வேலை தேடுபவர்களுடன் வேலை வழங்குபவர்களைப் பொருத்த செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்பத் தளம்

a. (i) மட்டும்   b. (i) மற்றும் (ii) மட்டும்   c. (iii) மட்டும்
d. (i) மற்றும் (iv) மட்டும்   e. விடைதெரியவில்லை

8. What is the theme of "World Space Week 2024" celebrated from, October 4th to 10th 2024?

**a. Space and climate change**   b. Space and energy sustainability
c. Women in space   d. The moon: Gateway to the stars
e. Answer not known

2024,அக்டோபர் 4 முதல் 10 வரையிலான ஒருவாரத்தில் எந்த கருத்துருவின் அடிப்படையில் "உலக விண்வெளிவாரம் 2024"கொண்டாடப்பட்டது?

a. விண்வெளி மற்றும் காலநிலைமாற்றம்
b. விண்வெளி மற்றும் ஆற்றல் நிலைத்தன்மை
c. விண்வெளியில் மகளிர்
d. நிலா : நட்சத்திரங்களின் வாயில்
e. விடைதெரியவில்லை

9. The work of laying Optical Fibre Cable (OFC) was initiated at ____ village of Kanyakumari District

a. Chinnamuttom   b. Kodimunai   c. Neyyoor
**d. Muthalakurichi**   e. Answer not known

கன்னியாகுமரிமாவட்டம் ______கிராமத்தில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் பதிக்கும் பணி தொடங்கப்பட்டது

a. சின்னமுட்டம்   b. கொடிமுனை   c. நெய்யூர்
d. முத்தலக்குறிச்சி   e. விடை தெரியவில்லை

## SPECIAL COMPETITIVE EXAMINATION 08/02/2025

## CURRENT AFFAIRS

### Sports

1. Who got the second place in the World Cup Chess Championship in 2023?
   a. Vaishali **b. Praggnanandhaa** c. Vijayalakshmi
   d. ViswanathanAnand e. Answer not known
   2023 ஆம் ஆண்டு உலகக் கோப்பைச் சதுரங்கப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர் யார்?
   a.வைசாலி b.பிரக்ஞானந்தா c.விஜயலட்சுமி
   d.விசுவநாதன் ஆனந்த e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE